விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 349 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 17 திங்கட்கிழமை (02.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டம்
### பொலிஸார் விசாரணை

(வல்வெட்டித்துறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாள் கொண்டாடப்பட்ட சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த நவம்பர் 26ஆம் திகதி புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாளை முன்னிட்டு வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத் 15

## பிரித்தானியாவில் புலிகளுக்கு பணம் சேர்த்த குற்றச்சாட்டு
### கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

(கொழும்பு)

பிரித்தானிய நாட்டில் விடுதலைப் புலிகள் அமைப்புக்குப் பணம் சேகரித்த குற்றச்சாட்டில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சிப் பிரதேசத்தை சேர்ந்த 43 வயதுடைய குறித்த நபர், 2009ஆம் ஆண்டு நாட்டை விட்டுச்சென்று பிரித்தானியக் குடியுரிமை பெற்றவர் 15

## செய்தித்துளிகள்

### முடிவுக்கு வரவுள்ள மாகாண சபை முறைமை



ரில்வின் சில்வா பகிரங்கம்

14ஆம் பக்கம் பார்க்க



நினைவேந்தலை வைத்து
### இனவாதத்தை தூண்டாதீர்கள்
விஜித ஹேரத் பதிலடி

03ஆம் பக்கம் பார்க்க

### தேசிய பாதுகாப்புக்கு எந்தப் பங்கமும் இல்லை
# தமிழ் மக்கள் அமைதியாக உறவுகளை நினைவேந்தினர்
## நினைவேந்தலை தடுக்கவும் மாட்டோம்
### பாதுகாப்புச் செயலர் உறுதி



(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவேந்தும் நிகழ்வுகளை முன்னெடுத்தமையால் தேசிய பாதுகாப்புக்கு எவ்விதமான அச்சுறுத்தல்களும் ஏற்படவில்லை எனப் பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்த தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## லாஃப்ஸ் காஸிற்கு கடும் தட்டுப்பாடு
### விநியோக வாகனம் பருத்தித்துறையில் முற்றுகை

(பருத்தித்துறை)

கடந்த ஒரு மாத காலமாக லாஃப்ஸ் எரிவாயு விநியோகம் முற்றாகத் தடைப்பட்ட நிலையில் அதுகுறித்து அரசாங்கம் 15

### பிறப்பு - இறப்பு பதிவாளர்
## விபத்தில் உயிரிழப்பு
### சுதுமலையில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

சுதுமலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் படுகாய மடைந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனி 15

### வவுனியாவில் வாள்வெட்டு
## ஒருவர் உயிரிழப்பு

(ஓமந்தை)

வவுனியா ஓமந்தை சேமமடுப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று மாலை குறித்த பகுதியில் மாடுகளைச் சாய்த்துக்கொண்டு 16

### முகநூலில் தலைவரின் படம்
## கைதான குடும்பஸ்தரிடம் 48 மணிநேரம் விசாரணை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட, இணுவிலைச் சேர்ந்த குடும்பஸ்தரை எதிர்வரும் 04ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மாவீரர் நாட்கள் தொடர்பான பதிவுகள், விடுதலைப் புலிகளின் தலைவர், புலிகளின் சீருடை 15

## ஜனாதிபதி அநுரவின் உரையில் அரசியல் தீர்வைக் காணோம்
### சிறிதுங்க ஜயசூரிய காட்டம்



(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தனது அக்கிராசன உரையில் ஏன் தெளிவுபடுத்தவில்லை என ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் 15

நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
10.08.1936

விண்ணில்
17.11.2020

தொழிலதிபர்

## அமரர் மாணிக்கம் வேலும்மயிலும்

(உரிமையாளர் ஈஸ்வரி அரிசி ஆலை எள்ளங்குளம் – சமரபாகு)

**கார்த்திகை வளர்பிறை 3 ம் நாள் (02.12.2024)**

கண்ணுக்கு ஒளியாய், நெஞ்சத்தில் நினைவாய்
நிலையாய் என்றும் எங்களோடு
எங்களின் இறைவனாய் என்றும்
எங்களை வழி நடத்த வணங்குகிறோம்....

**நீங்கா நினைவில்**

**மனைவி(ஈஸ்வரியம்மா), பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

விமலாதேவி - தங்கராசா, வசந்தாதேவி - அருந்தவராசா(கனடா), விஜயாதேவி - கார்த்திகேசு, லிங்கேஸ்வரன் - வதனா(சுவிஸ்), லிங்கராணி - சிவநேசன்(கனடா), தயாநிதிதேவி - விவேகானந்தன்(சுவிஸ்) நேசலிங்கம் - நிரோஜினி, குணசுந்தரம் - வதனா(கனடா), தமேந்தினி - நிசந்தன்(கனடா), வீரரூபன் - பவித்திரா (மருத்துவர் - மந்திகை ஆதார வைத்தியசாலை), கௌசலா - காந்தரூபன்(பிரான்ஸ்), கல்பனா - அந்தணன்(கனடா), நிரஞ்சனா - நவநீதன்(கனடா)

"ஈஸ்வரி இல்லம்"
சாய்ஈஸ் மருத்துவ நிலையம்,
சமரபாகு, வல்வெட்டித்துறை.

(C-1696)

# மரண அறிவித்தல்



மலர்வு
22.01.1941

உதிர்வு
30.11.2024

## திரு. ஆறுமுகம் கோபாலு

யாழ். நெடுந்தீவு மேற்கு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி பிரமந்தனாறு 559/38ம் வாய்க்காலை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கோபாலு அவர்கள் 30.11.2024 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம் - பத்தினிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் பூரணம் அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற கந்தசாமி, சின்னப்பு, வேலுப்பிள்ளை, பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் புவனேஸ்வரி, சிவராசா(சுவிஸ்), இராசலிங்கம் (லண்டன்), வசந்தி, தயன்(ஜிந்துசன் மகால் உணவகம் - சுண்டிக்குளம்), கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேஸ்வரன், உமாபதி(சுவிஸ்), ஜெயமலர்(லண்டன்), தெய்வேந்திரம்(தெய்வம் பல்பொருள் வாணிபம் -தருமபுரம்), சிவலோஜினி, கஜறூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜன்சன்(சுவிஸ்), ஜெனனி, கீர்த்தனா(சுவிஸ்), அபர்ணா(சுவிஸ்), செந்தூரன்(சுவிஸ்), றவிசனா(லண்டன்), றஜான்(லண்டன்), ஜெயான்(லண்டன்), லக்ஷிகன்(தென்கிழக்கு பல்கலைக்கழகம்), ரிசாந்தினி(கிளி/ தருமபுரம் மத்திய கல்லூரி), ஜிந்துசா, ஜிந்துசன்(கிளி/ பிரமந்தனாறு மகா வித்தியாலயம்), காலஞ்சென்ற திவியன், ஆதிரன், வர்ணிகா(கிளி/ பிரமந்தனாறு மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று 02.12.2024 திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிரமந்தனாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(1698)

பிரமந்தனாறு,
559/38ம் வாய்க்கால்,
கிளிநொச்சி.

வசந்தி (மகள்): +94772631811
தயன் (மகன்): +94740529309
சிவராசா(மகன்): +41795355064

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவேந்தும் உரிமையை நிராகரித்து இனவாதத்தை தூண்டாதீர்கள்!

## சிங்கள அரசியல்வாதிகளுக்கு அரசாங்கம் பதிலடி

(கொழும்பு)

**போரில் உயிரிழந்த தங்கள் உறவுகளைத் தமிழ் மக்கள் நினைவேந்துவது அடிப்படை மனித உரிமையாகும். அதனை எவரும் நிராகரிக்க முடியாது. அவ்வாறு நிராகரித்து மீண்டும் இனவாதத்தைத் தூண்ட முயல வேண்டாம் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

"வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வு என்ற பெயரில் மரணித்த விடுதலைப்புலிகளைத் தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவு கூர்ந்துள்ளார்கள்.

எனவே, அங்கு இனிமேல் எந்தவொரு நினைவேந்தல் நிகழ்வுக்கும் அநுர அரசு அனுமதி வழங்கக்கூடாது. மாவீரர் தினத்தை நினைவேந்தியவர்களை அநுர அரசு உடன் கைது செய்ய வேண்டும்" என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் சரத் வீரசேகர ஆகியோர் தெரிவித்திருந்தனர்.

அவர்களின் கருத்துக்களுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் விஜித ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில், போரில் உயிரிழந்த தமது உறவுகளை வடக்கில் உள்ள உறவுகள் நினைவேந்தும் போது அதற்கு எதிராக தெற்கில் உள்ள சிலர் இனவாதம் கக்கினார்கள்.

அதேபோல் போரில் உயிரிழந்த தமது உறவுகளை தெற்கில் உள்ள உறவுகள் நினைவேந்தும்போது அதற்கு எதிராக வடக்கில் உள்ள சிலர் இனவாதம் கக்கினார்கள்.

ஒவ்வொரு வருடமும் மே, நவம்பர் மாதங்களில் இத்தகைய இனவாதக் கருத்துக்கள் வெளிவந்திருந்தன. இந்த இனவாதக் கருத்துக்கள் இனியும் இருக்கக் கூடாது.

நினைவேந்தல் உரிமை சகல இனத்தவர்களுக்கும் உரியது. அதில் இன வேறுபாடு இருக்கக்கூடாது.

இலங்கையில் நினைவேந்தல் நிகழ்வைப் பயங்கரவாதக் கண்ணோட்டத்துடன் எவரும் பார்க்கக் கூடாது.

நாட்டில் அமுலில் உள்ள சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு அமைதியான முறையில் நினைவேந்தல் நிகழ்வுகளை எவரும் நடத்தலாம்.

அதை நாம் தடுத்து நிறுத்த முடியாது. அதேவேளை, சட்டங்களை மீறிச் செயற்படுபவர்கள் கைது செய்யப்படுவார்கள். அது பொலிஸாரின் கடமையாகும் என்றார். (நி-8)

# கடற்றொழில் அமைச்சரை சந்திக்கிறார் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா





(கொழும்பு)

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா நாளை மறுதினம் புதன்கிழமை கொழும்பில் சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது இலங்கை, இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று தெரிய வருகின்றது.

விசேடமாக, இந்திய மீனவர்கள் அத்துமீறல்களில் ஈடுபடுவதன் காரணமாக தொடர்ச்சியான கைதுகள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக, அமைச்சர் சந்திரசேகரும், அத்துமீறும் இந்திய மீனவர்கள் சம்பந்தமாக நெகிழ்ச்சித் தன்மையைக் காண்பிக்க முடியாது என்று அறிவித்துள்ளார்.

அத்துடன், ஆட்சிப்பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கமும் அத்துமீறும் இந்திய மீனவர்களை கைது செய்யுமாறும், தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்துகின்றபோது அவற்றைக் கைப்பற்றுமாறும் கடற்படைக்கு கடுமையான உத்தரவினைப் பிறப்பித்துள்ளது.

இவ்வாறான பின்னணியிலேயே இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அமைச்சர் சந்திரசேகரைச் சந்திக்கிறார். இதேநேரம், கடற்றொழில் மற்றும் கடல்சார் ஆய்வுகள் குறித்தும் இந்தியாவுடன் கூட்டுச் செயற்பாடுகளில் பங்கேற்பது தொடர்பாகவும் ஆராயப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர் சந்திரசேகர் பதவியை ஏற்றுக்கொண்டதன் பின்னர் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அவரைச் சந்திக்கும் முதலாவது சந்தர்ப்பம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் கல்விசாரா
ஊழியராகக் கடமையாற்றும்
திரு. இ.கஜேந்திரநாதன் அவர்களின்
அன்பு மாமனார்

அமரர்.
திரு. தம்பிப்பிள்ளை
பாலசிங்கம்



அவர்கள் 30.11.2024 அன்று காலமானார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதோடு
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

(591)

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை.

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 – 04 – 1942

மறைவு 28 – 11 – 2019



அமரர்.திருமதி.
நகுலாம்பிகை ஜெகதீசன்
(திதி–வளர்பிறை துதியை 02.12.2024)

கார்த்திகை பிறந்தவுடன் உங்கள் நினைவு எங்களை வாட்டுகின்றது அம்மா!
கண்முன்னே வாழ்ந்த வாழ்க்கை கனவாகிப் போனாலும்
எம்முள்ளே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும் அம்மா.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(582)

ஒழுங்கை,
மானிப்பாய்.

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாத இராசி பலன்கள்-2024

## மனதில் தெளிவு உண்டாகும்



**கிரகநிலை** - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் செவ்வாய் - சுக ஸ்தானத்தில் கேது - ரண ருண ரோக ஸ்தானத்தில் சூரியன், புதன்(வ), சந்திரன் - களத்திர ஸ்தானத்தில் சுக்கிரன் - பாக்கிய ஸ்தானத்தில் சனி - தொழில் ஸ்தானத்தில் ராகு - அயன சயன போக ஸ்தானத்தில் குரு (வ) என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 03-12-2024 அன்று சுக்கிரன் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 15-12-2024 அன்று சூரியன் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-12-2024 அன்று சுக்கிரன் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் குழப்பங்கள் நீங்கி மனதில் தெளிவு உண்டாகும். முயற்சிகளில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். வியாபாரத்தில் நீங்கள் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் உண்டாகலாம்.

உழைப்பு அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவு வேகம் இருக்கும். பணவரத்து தாமதப்படலாம். ஓடர்கள் தொடர்பாக நீங்கள் அலையும் அலைச்சல் வெற்றி தரும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த பிரச்சினைகள் அகலும். அரசாங்க அனுகூலம் கிடைக்கும்.

குடும்பத்தில் இருப்பவர்களின் வீண் பேச்சால் மனவருத்தம் உண்டாகலாம். கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். வீண் பிரச்சினைகளில் தலையிடாமல் ஒதுங்கிச் செல்வது நன்மை தரும். உறவினர் நண்பர்களிடம் பழகும்போது கவனம் தேவை. பெண்களுக்கு குழப்பங்கள் நீங்கி மனதில் தெளிவு உண்டாகும். எதையும் ஒரு முறைக்கு இருமுறை யோசித்து செய்வது நல்லது.

கலைத்துறையினருக்கு காரிய வெற்றிக்கு தேவையான உதவிகள் கிடைக்கும். எதிர்பாராத செலவு உண்டாகும். சொத்து, மனை சம்பந்தமான காரியங்களில் தடை, தாமதம் ஏற்படலாம். வீண்பயம் ஏற்படும். ஏற்கனவே செய்த காரியங்களுக்கான பலனை அடைய வேண்டி இருக்கும். அரசியல்துறையினருக்கு வீண் வழக்கு விவகாரங்கள் வரலாம் எச்சரிக்கையாக செயற்படுவது நல்லது.

வெளிநாட்டு பயண வாய்ப்புகள்




வரலாம். சிலர் வெளியூர் பயணம் செல்வார்கள். எதிர்பாலினத்தாருடன் பழகும் போது கவனம் தேவை. மனதில் தெம்பு உண்டாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும். மாணவர்களுக்கு முயற்சிகளில் எதிர்பார்த்த பலன் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். கூடுதல் மதிப்பெண் பெற அதிக நேரம் படிப்பது நல்லது.

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தை மாற்றலாமா என்ற எண்ணம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் பதவி உயர்வு கிடைக்கப் பெறுவார்கள். தொழில், வியாபாரத்தில் வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வாகனங்கள் மூலம் லாபம் கிடைக்கும். சரக்குகளை வெளியூர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை.

**திருவாதிரை:** இந்த மாதம் கணவன் மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை குறையும். உங்களைப் பற்றி யாராவது வீண் அவதூறு பேசினால் கண்டுகொள்ளாமல் ஒதுங்கி விடுவது நல்லது. விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ருசியான உணவை உண்பீர்கள்.

**புனர்பூசம் 1, 2, 3ஆம் பாதங்கள்:** இந்த மாதம் எந்த ஒரு வேலையையும் மனதிருப்தியுடன் செய்வீர்கள். சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும். பணவரத்து கூடும். கடுமையான முயற்சிகள் மேற்கொள்வது குறையும். வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவு உண்டாகும்.

**பரிகாரம்:** புதன் கிழமையில் பெருமாளுக்கு துளசி மாலை அணிவித்து தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து வணங்குவது வாழ்க்கையில் முன்னேற்றத்தை தரும்

**அதிஷ்ட கிழமைகள்:** புதன், சுக்கிரன்

**அதிஷ்ட தினங்கள்:** 25, 26, 27

**சந்திராஷ்டம தினங்கள்:** 5, 6

## பணவரத்து அதிகரிக்கும்



**கிரகநிலை** - ராசியில் செவ்வாய் - தைரிய வீரிய ஸ்தானத்தில் கேது - பஞ்சம ஸ்தானத்தில் சூரியன், புதன்(வ), சந்திரன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சுக்கிரன் - அஷ்டம ஸ்தானத்தில் சனி - பாக்கிய ஸ்தானத்தில் ராகு - லாப ஸ்தானத்தில் குரு (வ) என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 03-12-2024 அன்று சுக்கிரன் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 15-12-2024 அன்று சூரியன் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-12-2024 அன்று சுக்கிரன் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் வீண் செலவுகள் குறையும் எந்த ஒரு வேலையை செய்து முடிப்பதிலும் இருந்த தடை, தாமதம் நீங்கும். வீண் விவகாரங்களில் தலையிடுவதையும் மற்றவர்களுக்காக வாதாடுவதையும் தவிர்ப்பது நல்லது. வருமானம் கூடும். மன திருப்தி உண்டாகும்.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு புதிய ஓடர்கள் பெறுவதில் இருந்த தாமதம் நீங்கும். வரவு இருந்த போதிலும் வியாபாரம் தொடர்பாக திடீர் முதலீடு செலவு உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமுடன் இருப்பது நல்லது. மேலிடத்துடன் கனிவை அனுசரிப்பது நல்லது. உறவினர்கள், நண்பர்கள் உதவியாக இருப்பார்கள்.

குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. வாழ்க்கை துணையின் உடல் நலத்தில் கவனம் தேவை. பிள்ளைகளுக்காக அலைய வேண்டி இருக்கும். மகிழ்ச்சி உண்டாகும். பெண்கள் அடுத்தவர்கள் பிரச்சினைகளை தீர்க்க முயற்சிகளை மேற்கொள்வதை தவிர்ப்பது நல்லது. தேவையற்ற செலவு ஏற்படலாம். எதிலும் கவனமாக இருப்பது நல்லது.

கலைத்துறையினருக்கு முயற்சிகள் சாதகமான பலன் தரும். பணவரத்து அதிகரிக்கும். தொழில் தொடர்பான காரியங்களை யோசித்து செய்வது நல்ல பலன் தரும். வீண் கவலை ஏற்பட்டு நீங்கும். பயணங்களில் இருந்த தடை நீங்கும். புத்திசாதுர்யத்தால் எல்லாவற்றையும் சமாளித்து வெற்றி காண்பீர்கள். அரசியல்துறையினருக்கு மேலிடம் நீங்கள் சொல்வதை கேட்டு நடக்கவில்லையே என்ற எண்ணம் ஏற்பட்டு நீங்கும்.

வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும். நீங்கள் மற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதில் தயங்க மாட்டீர்கள். பேச்சு திறமை அதிகரிக்கும்.




மாணவர்கள் ஆசிரியர்களின் உதவியுடன் பாடங்களை சந்தேகம் நீங்கி தெளிவாக படிப்பது நல்லது. மனதில் உற்சாகம் உண்டாகும்.

**புனர்பூசம் 4 ஆம் பாதம்:** இந்த மாதம் உடற்சோர்வு உண்டாகலாம். பூர்வீக சொத்துக்கள் மூலம் வரும் வருமானம் தாமதப்படும். திருமணம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான நிலை இருக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் எதிர்பாராத தடை, தாமதம் நீங்கும். பணவரத்து அதிகரிக்கும். எதிர்பார்த்த பண உதவி வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது.

**பூசம்:** இந்த மாதம் அலுவலகம் தொடர்பான பணிகள் தாமதப்படும். எதிலும் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களுடன் வீண் வாக்கு வாதங்களை தவிர்த்து சாதாரணமாக நடந்து கொள்வது நல்லது. வாழ்க்கை துணையுடன் இருந்த மனஸ்தாபங்கள் விலகும். நண்பர்கள், உறவினர்கள் வருகை இருக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**ஆயிலியம்:** இந்த மாதம் வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. கடும் முயற்சிகள் பலன் தரும். செலவு அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலை காணப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். விட்டுச் சென்ற நண்பர் மீண்டும் வந்து சேர்வார். அதனால் மகிழ்ச்சி உண்டாகும்.

**பரிகாரம்:** திங்கட்கிழமையில் ஆதிபராசக்தியை வழிபடுவது காரிய தடைகளை நீக்கும். மன அமைதியை தரும்

**அதிஷ்ட கிழமைகள்:** சந்திரன், சுக்கிரன்

**அதிஷ்ட தினங்கள்:** 1, 2, 28, 29

**சந்திராஷ்டம தினங்கள்:** 7, 8

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி அநுரவுக்கு ரணில் பாராட்டு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்துடன் இணைந்து செயற்பட்டு வருவது தொடர்பாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு தான் பாராட்டு தெரிவிப்பதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். தனியார் ஹோட்டல் ஒன்றின் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார். குறித்த நிகழ்வில் அமைச்சர் விஜித ஹேரத், எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட பல அதிதிகள் கலந்து கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-8)


பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு

கார்த்திகை 25 - மார்கழி 10

02 மார்கழி 2024

"பெண்ணே உன் மீது திணிக்கப்பட்ட கைவிலங்கை தகர்த்தெறிந்து எழுந்து வா"

JSAC

16 2024

(சி-1678) யாழ். சமூக செயற்பாட்டு மையம்


யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

## திரு. சின்னையா துரைராசா (SLTS-I) (மிருதங்க ஞானவாரிதி)



சேவை விபரம்:

யா/நல்லூர் விக்னேஸ்வரா வித்தியாலயம்
01.09.1998–31.05.1999

யா/கலட்டி மெ.மி.த.க பாடசாலை
01.06.1999–01.09.2002

யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
02.09.2002–24.07.2006

யா/கனகரத்தினம் ம.ம வித்தியாலயம்
27.07.2006–31.12.2010

யா/கைதடி முத்துக்குமாரசாமி ம.வி
01.01.2011–08.01.2013

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
09.01.2013–இன்று வரை

'ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப்புடைத்து'

### பதில் உதவிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து-விரல்களால் வித்துவம் புரிந்த மணி விழா நாயகனே!

முத்தமிழில் ஒன்றாகிய இசைத்துறையிலே 1998 ஆம் ஆண்டு இசையாசிரியராக முதல் நியமனம் பெற்ற திரு சின்னையா துரைராசா அவர்கள் சிறந்த இசை ஆசானாகவும், மிருதங்க வித்துவானாகவும் அறியப்படுகிறார். 2013 ஆம் ஆண்டு தொடக்கம் பாரம்பரியம் மிக்க கொக்குவில் இந்துக் கல்லூரியில் கடமையாற்றி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுடன் , இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளார். வடமாகாணத்தின் குறிப்பிடத்தக்க மூத்த மிருதங்க வித்துவானாகிய இவர் பல மாணவர்களை மிருதங்க அரங்கேற்றம் செய்து கலைப்பணியாற்றியுள்ளார். பற்பல விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுள்ள இவர் வலய ரீதியான நிகழ்வுகளிலும் தனது மிருதங்க இசையால் சிறப்பித்திருக்கிறார். கலைக்கும் கல்விக்கும் சிறப்புற பணியாற்றி ஒய்வுபெறும் விரல்களால் வித்துவம் புரிந்த மணி விழா நாயகனின் ஒய்வுக் காலம் சிறக்கவும் கலைப்பணி தொடரவும் வாழ்த்துகிறேன்.

திரு து.துசியந்தன்,
பதில் உதவிக் கல்விப்பணிப்பாளர் (அழகியல்), வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

### அதிபரின் வாழ்த்துச் செய்தி

மனிதனின் ஆழ்மன உணர்வின் வெளிப்பாடாக அமைபவை கலைகள் இவை மனிதர்கள் இறைவனை உணரவைக்கவும், இறைநிலையை அடைய வைக்கவும் வல்லவை. அறுபத்து நான்கு கலைகளில் மிகச் சிறப்பானதாகக் கருதப்படும் இசைக் கலையில் நாத தத்துவத்தின் வெளிப்பாடாக, பிரபஞ்ச தத்துவத்தை விளக்கும் உன்னதமான கலை வடிவம் மிருதங்கக் கலை. ஆடவல்லானின் அசைவுக்கும் நந்தியெம் பெருமானால் அருளப்பட்டதாகக் கருதப்படும் இப்புனிதக் கலையினை தனது மூச்சாகக் கொண்டு இதய பூர்வமாகவும் பணியாற்றிவரும் திருவாளர் சின்னையா துரைராஜா அவர்கள் மணிவிழாக் காணும் நன்னாளில் அவரை வாழ்த்தி மகிழ்வதில் பெருமையடைகின்றேன்.

'கலைவழி போதிப்பவன் கடவுள்' என்னும் திண்ணிய பேருண்மைக்கு அமைவாக எமது கல்லூரியின் நீண்டகாலம் சேவையாற்றியவர் இவர். மிருதங்கக் கலையில் ஆழக்கால் பதித்திருக்கும் ஆற்றுகையாளராக, உலகத்தவரால் வியன்று பாராட்டப்படும் ஒரு இசை மேதை எமது கல்லூரியில் பணியாற்றியுள்ளார் என்பது எமது கல்லூரிக்கும் எமக்கும் கிடைத்துள்ள அளவிடக்கரிய பெருமையாகும்.

மாணவர் மனங்களில் மிருதங்க இசைக்கலையை பேரோட்டமாகவும் உயிரோட்டமாகவும் ஆழப்பதிக்கும் வல்லமை பெற்றவர். உயர்ந்த தாள இசைத் தத்துவத்தை மிக அழகாககவும் எளிமையாகவும் தர்மசிந்தனையோடு கற்பித்து வருபவர். இப்பணியூடாக உன்னதமான மாணவ பரம்பரையினை இவர் உருவாக்கியுள்ளமை மிகவும் போற்றுதற்கரிய விடயமாகும். இன்றைய காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் விதத்தில் இளஞ் சமூகத்தை நெறிப்பிறழ்வில் செல்ல விடாமல் கலாசார வழிப்படுத்தலில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து வருகின்றார். இவரது மாணவர்கள் பலர் இன்று உலகெங்கும் மிருதங்க இசைக் கலையின் புகழ் பரப்பி அதன் மூலம் இவரது புகழையும் நிலைபெறச் செய்து வருகின்றனர்.

இவர் மிருதங்கத் துறையில் 35 வருடங்களுக்கு மேலாக வாசித்துக் கொண்டுள்ளமையுடன் இதுவரை பல மாணவர்களுக்கு மிருதங்க அரங்கேற்றம் செய்துள்ளார். பரத நாட்டிய அரங்கேற்றுகைகள் பலவற்றுக்கும் வாசித்துள்ளார் என்பதோடு இந்தியாவில் இருந்து வருகை தரும் பல்துறைசார் கலைஞர்களுக்கும், இலங்கையின் புகழ்பூத்த பல ஆலயங்கள் மீது பாடப்பட்ட பக்திப் பாமாலைகளுக்கும் மிருதங்கம் வாசித்துள்ளார். இசைக்கலைமணி, இசைமானி, மிருதங்க ஞானவரி என்பன போன்ற எண்ணற்ற பட்டங்களைப் பெற்றவர் என்பது எமக்கும் எமது மண்ணிற்கும் கிடைத்துள்ள பெருமையாகும்.

நான் இவருடன் இணைந்து பணியாற்றிய, பழகிய காலங்கள் குறைந்தளவே ஆயினும் "கற்றோர் கேண்மை பெரிதும் இனிது" என்பதற்கிணங்க இவரது நற்பண்புகள் பலவற்றாலும் ஈர்க்கப்பட்டவன் என்பது உண்மை. உடையில் எளிமை, உதட்டில் புன்னகை, கடமையில் நேர்மை, கல்வியில் புலமை, பண்பில் பணிவு பார்வையின் அறிவின் ஒளி, நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை எனப் பல பண்பு நலன்கள் இவரை அணி செய்வன எனில் அது மிகையல்ல. எங்களோடு இணைந்து பயணித்த இவரது தன்னலமற்ற பணி வாழும் மனிதருக்கோர் முன்னுதாரணம் ஆகும்.

இன்றைய நாளில் ஓய்வுபெறும் திருவாளர் சின்னையா துரைராஜா அவர்கள் நீண்டகாலம் உடல் உள ஆரோக்கியத்துடனும், தமது குடும்பத்தவருடனும் சீரும் சிறப்புமாக மகிழ்வோடும் வாழ எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப்பிரமணிய பெருமானை உளமார வேண்டி வாழ்த்துகின்றேன்.

வாழ்க உமது பணி

அதிபர்,
திரு.பெ.வசந்தன், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

### நலன்புரிக்கழக வாழ்த்து

பாரினில் புகழ் ஓங்கிடவே
கற்றுவல்ல இசைக்கலை ஆசிரியராய் தோன்றி
ஆசிரியப் பணியை துச்சமாக மதித்து
பல சாதனைகள் நிகழ்த்தி
மாணவர்கள் பலர் சிறந்து விளங்கிட
அன்புடன் அறிவை பண்பாக புகட்டி
சூரியன் ஒளி தருவது போல் ஒலிபரப்பி
சுழன்று வந்த சேவைக்காலமும் சென்று மறைந்திட
ஓய்வுக் காலமதனில் சேவைதனை நினைத்து மகிழ்ந்திடவே
மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்
ஆசிரிய நலன்புரிக்கழகம்

(சி-1692)

வாழ்த்துவோர்: ஆசிரிய நலன்புரிக் கழகம், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

# இராசிபலன்

02.12. 2024
கார்த்திகை 17, திங்கட்கிழமை
பிரதமை பிற்பகல் 1.04 மணிவரை

கேட்டை பிற்பகல் 4.31 மணிவரை
சுபநேரம் 12.15-1.45 மணிவரை
இராகுகாலம் 7.45-9.15 மணிவரை

சந்திராஷ்டமம் - பரணி, கார்த்திகை

வளவன்

**மேஷம்** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, சுணங்கிய காரியங்களில் மாலை நேரம் முன்னேற்றம் ஏற்படலாம், பயணங்களின் போது நிதானம் அவசியம்.

**கடகம்** குடும்பத்தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், தொழில் வியாபாரம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும், பிள்ளைகள் வழியில் பெருமைகள் வந்து சேரலாம்.

**துலாம்** வாதத்திறமையால் முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் தீவிரம் கூடும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், உற்சாகமான நாள்.

**மகரம்** பொது வாழ்வில் கௌரவம் கூடும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** பொதுவாழ்வில் கௌரவம் கூடும், முக்கிய கருமங்களை மதியத்திற்கு முன் நிறைவேற்றுவது நல்லது, காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையலாம்.

**சிம்மம்** பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு, சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு.

**விருச்சிகம்** புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, பிறர் உதவியுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், போசனசுகமுண்டு, குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு** எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மீனம்** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

மதங்கள் பல இருந்தாலும் ஒழுக்கம் ஒன்று தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகநாவலர் நினைவாக மரநடுகை

(சாவகச்சேரி)

விதைப்பதும் முளைப்பதும் கார்த்திகையிலே எனும் தொனிப்பொருளில் ஆறுமுகநாவலர் நினைவாக கடந்த சனிக்கிழமை இருபாலையில் பயன்தரு மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன.

பசுந்தேசம் அமைப்பும் இயற்கையின் நண்பர்கள் அமைப்பும் இணைந்து மேற்படி மரநடுகைத் திட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (நி-8-30)


**லங்கா மஹால் (PVT) LTD**

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(579)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

**00919566156719**

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

**077 839 3974**


# படவரைஞர்களைப் பதிவு செய்தல்-2025

யாழ் மாநகர சபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள், மற்றும் 2024 பதிவினை மேற்கொண்டு புதுப்பித்துக்கொள்ள விரும்புவோர் கீழ்வரும் விடயங்களினைக் கருத்திற்கொண்டு உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 04.12.2024 தொடக்கம் 26.12.2024 ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை பௌதிக திட்டமிடல் பகுதியில் மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- NVQ-5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை பூர்த்தி செய்துள்ளவர்கள் உரிய சான்றிதழினை சமர்ப்பித்து படவரைஞராக பதிவுகளினை மேற்கொள்ளலாம்.
- மேற்குறிப்பிட்ட நிபந்தனைக்கு அமைய கடந்த காலங்களில் பதிவினை மேற்கொண்டவர்கள் பதிவுகளைப் புதுப்பித்தல் கட்டாயமானாதாகும்.
- பதிவுகளை மேற்கொள்ளாத படவரைஞர்கள் 2025 ஆம் ஆண்டிற்கான படவரைஞராக யாழ்.மாநகர சபையில் தொழிற்பட முடியாது

குறிப்பு:

- ❖ படவரைஞராக பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவ கட்டணம் - ரூபா 118.00 (100.00 + Vat 18%)
- ❖ உரியவாறு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, படவரைஞராக பதிவு மேற்கொள்வதற்கு தெரிவு செய்யப்படுவர்களுக்கான கட்டணம்- ரூபா 2360.00 (2000.00 + Vat 18%_)

**மாநரக ஆணையாளர்,**
**யாழ்.மாநகர சபை.** (c-1694)

# கேள்வி மனுக்கோரல்

## தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

## சங்க கட்டடங்களை வாடகைக்கு வழங்குதல்

எமது சங்கத்திற்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்படும் கட்டடங்கள், வாடகைக்கு வழங்கப்படவுள்ளன. ஆர்வமுடையோர் கேள்வி மனுவினை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

| தொ.இல | கட்டட விபரம் | அளவு |
|---|---|---|
| 01) | தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையிலுள்ள திரையரங்கக் கட்டடம் (முன்னைய துர்க்கா சினிமா) | 80' X 30' - 2400 சதுர அடி |
| 02) | அலுவலக மேல் மாடிக் கட்டம் (2 ஆவது தளம்) | 55' X 50' - 2750 சதுர அடி |
| 03) | சங்கத் தலைமைக் காரியாலய மேற்கூரை சூரிய மின்கல இணைப்பு பெற்றுக் கொள்வதற்கு | 2750 சதுர அடி |

01) மேற்குறிப்பிட்ட கட்டடத்தை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்தவர்கள் கேள்வி மனுவை முன்வைக்க முடியும். ஆர்வமுள்ளவர்கள் காங்கேசந்துறை வீதி, தெல்லிப்பழையில் அமைந்துள்ள சங்க தலைமைக் காரியாலயத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கட்டடத்தை பார்வையிட விரும்புவோர் அலுவலக வேலை நாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.4.30 மணி வரை பார்வையிட முடியும்.

02) ஆர்வமுள்ள கேள்வி மனுதாரர்கள் அலுவலக வேலை நாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 500.00 இனை காசாக செலுத்தி பொதுமுகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினை சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவத்தை தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ -து), காங்கேசந்துறை வீதி, தெல்லிப்பழை எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

03) விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி 16.12.2024 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னராக கிடைக்கக்கூடியவாறு "தலைவர். தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வது), தெல்லிப்பழை" எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**தெல்லிப்பழை பலநோக்கு**
**கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**தெல்லிப்பழை.**

**தெல்லிப்பழை**
**2024.12.02** (c-1695)

# சிவபுண்ணியமும்–காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயமும், அன்னதான சேவையும், திருவாசக முற்றோதலும் மாணிக்கவாசகத்தின் அடிநாதமாக விளங்குதல் உணரத்தக்கது

"ஆமாறுன் திருவடிக்கே அகம் குழையேன்"
அன்புருகேன் பூமாலை புனைந்தேத்தேன்
புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் திருக்கோயில் துகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்"

திருவண்டப் பகுதி - 93
திருச்சதகம் அறிவுறுத்தல் 4

**ஈழத்துச் சிதம்பர புராணம்- 45**

**மண்ணினிற் பிறந்தா செய்து மாண் பயனடியர் தம்மைத்**
**தண்ணமும் தருத்துவித்தல் தகைவிழாக் கண்ட வென்ற**
**கண்ணுதலுடைய பிள்ளையருளிய கருத்தை நாளும்**
**எண்ணி மேற்கொள்ளுஞ் சீலரிருப்பது மேற்றமன்றே.**

பூமியிலே பிறந்தவர்கள் அடையும் சிறந்த பயன் சிவனடியார்களுக்கு இனிய திருவமுது படைத்து அவர்களை உண்ணுவித்தல் அடையாக் கதவாக திருவமுதுபொலியும் மடாலயம் கடந்த மூன்று தினங்கள் தங்களது சேவையைத் தலைவர் E.S.P நாகரட்ணம் அவர்கள், 2024 வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எட்டுத் திக்குகளுக்கும், சமைத்த உணவு சென்று கொடுத்து பசி ஆற்றியமை மடாலயம் மாணிக்கவாசகரதும் திண்ணபுரச் சிவன் அருளாகும்.

கார்த்திகை மாத அமாவாசை பிதிர்களுக்கு அமுது மடாலயத்தில் சமைத்து, திருவாசகம் தந்த அருளாளர் மாணிக்கவாசகர் முன் படைத்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பசியாற்றியது ஐயனார் சிவனது அருளாகும். இந்த மாதம் ஐயப்பன் விரதம் சிவனது சோமவார விரதம் ஆகிய கார்த்திகை மாதம் மக நட்சத்திரத்தில் திருவாசகம் முற்றோதல், மாணிக்கவாசகர் அபிசேகம் மற்றும் அனர்த்தங்களால் மறைந்த ஆன்மாக்களுக்கு நம் முன்னோர் அனைவருக்கும் பிதிர்கடன் செய்து மாணிக்கவாசகர் முன் நடாத்திய ஆத்மாக்களின் ஆசியும் கிடைத்த பெருமையாகிய மாணிக்கவாசகர் மடாலயத்தை நாம் எல்லோரும் போற்றி வணங்கி மேலும் சிறப்படைய வாழ்த்துவோம்.

கண்ணுதற்கெருமானது சிவபெருமானது குழந்தையாகிய திருஞானசம்பந்தப் பிள்ளையார் அருளிச் செய்த திருவுள்ளக் கருத்தை [illegible] மேற்கொண்டு ஒழுகும் ஒழுக்கத்திற் சிறந்த மேலோர் [illegible] நகருக்கும் பெரிய உயர்ச்சியாகும் அன்றோ!

திருத்திண்ணபுரம் ஆலயம் அமைந்த இடத்தில் , துர்வாச முனிவர், அகத்திய முனிவர், தனிகரன் முனிவர், ஆண்டி முனிவர் ஆகிய துறவிகள் இந்தியாவிலிருந்து வந்து திருத் திண்ணபுரத்து பூமியில் பல காலமிருந்து அருந்தவம் பூசை செய்து வீடுபேறு அடைந்த இடம் ஆகும்.

துர்வாச முனிவர் தவம் செய்து வீடு பேறடைந்த இடம் மாணிக்கவாசகம் மடாலயம் அமைந்த திண்ணபுரத்தின் வட கிழக்கு ஆகிய இடம் ஆகும்.

சிவனடியார்களைச் சிவமாக எண்ணி மனமார வழிபட்டு உணவு முதலியன கொடுத்து பாதுகாத்து அப்புண்ணிய பயனால் மணமுள்ள கொன்றை மாலையணிந்த சிவபெருமானின் திருவடிகளையடைந்த திருவரும் செல்வர்கள்.

**இன்று சோம வாரம் - 3 ஆம் வாரம்**

கார்த்திகை மாதம் சோமவாரம் 2024 ஆண்டில் 5 நாட்கள் வருவது நாமும் திங்கள் திருவாசகம் ஓதுவோம். எல்லா நலனும் பெறுவோம் தக்ஷனின் மகள்கள் 27 நட்சத்திர நாமம். அவர்களை சந்திரன் திருமணம் செய்து ஒரு நட்சத்திரமாகிய ரோகிணியோடு மட்டும் அன்பைச் செலுத்தியதால் மற்றவர்கள் தந்தையிடம் முறையிட்டனர். தக்ஷன் சந்திரனை அழைத்து கடும் நோயினால் வருந்தி தேய்ந்து போவாய் எனச் சபித்தான். சந்திரன் கலங்கி தேய்ந்து போய், கார்த்திகை மாதம் ஒவ்வொரு திங்களும் சிவனை நோக்கி விரதம் இருந்தான். முக்கண் சிவன் சந்திரபகவான் விரதத்தில் மகிழ்ந்து சாபவிமோசனம் பெற்றதுடன் தேய்ந்து போன் ஒரு கலையுடன் சந்திரனை தனது திருமுடியில் அணிந்து சோமநாதன், சந்திரசேகரன், சந்திர மௌளீஸ்வரன், சோமசுந்தரர் எனவும் நாமங்களால் அழைக்கப்பட்ட நம் இறைவனின் திருவடிகளை வணங்கி ஆலய தரிசனம் பெறுவதுடன் திருவாசகமும் ஓதுவோம்.

சிவபெருமானுக்குச் செய்யப்படும் வழிபாடுகளே சிவபுண்ணியம் சிவாகம விதிப்படிச் செய்யத்தக்கன. உள்ளத்தில் அன்பும் வேண்டும். அன்பு விதை போன்றது, பூசைவிதி நிலம் போன்றது அர்ச்சணை வயலுல் அன்பு வித்திட்டு சிவபுண்ணியங்களே பிறவியிலிருந்து நம்மை மீட்கவல்லன.

**அன்பே சிவம் - திண்ணபுரச் சிவன்,**
**மாணிக்கவாசகர் மடாலயம்,**
**க.கு.க சிவபாவன், செயலாளர்**

(c-1696)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி பீடாதிபதி
## உயர்திரு திருநானந்தம் ஜெயகாண்டீபன் அவர்களின்
# மணி விழா சிறப்பு மலர்



### Message from Vice Chancellor

Mr. Thirunanandham Jayakandeepan, who is celebrating the mani vizha ceremony today. is known as a student of the Department of Mathematics at the University of Jaffna in 1988.

I am happy to know that Mr. Kandeepan had a illustrious career as a teacher educationist and in latter part of this career held many prestigious responsible positions as lecturer, lecturer coordinator, Vice president and President in Vavuniya National College of Education and Jaffna National College of Education.

May his retirement be happy and healthy. I pray to Almighty God!

**Professor Srisatkunarajah,**
**Vice-Chancellor,**
**Professor in Mathematics,**
**University of Jaffna.**



### (Congratulatory Message From chief Commissioner (Teacher Education) Ministry of Education

Unique and memorable happy retirement wishes for Mr.T.Jeyakandeepan the President of Jaffna National College of Education. you have been a great asset to the field of Teacher Education.

Your Management skills are appreciable in incorporating all the stake holders of the college for the execution of education process. you achieved the targets and goals by following the holistic approach as a team effort I believe that was the main factor for your success in every effort.Thank you for your support and contribution Wish you good luck and very happy retirement filled with joy goodness and prosperity.

**Mrs.B.G.I.Kalani Hemalie,chief Commissioner.**



### வாழ்த்துரை

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி திரு. தி. ஜெயுகாண்டீபன் அவர்களின் மணிவிழா வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு சிறந்த அர்ப்பணிப்புள்ள நல்லாசிரியராக. கல்வியியலாளராக. உபபீடாதிபதியாக . பீடாதிபதியாக பல பரிமாணங்களில் அவரது கல்விப்பணி அமைந்துள்ளது. ஆக்கத்திறன் உள்ளவரே ஆசிரியர் என்பதற்கு முன்னுதாரண புருஷர் அவர். கல்வியியல் சார்ந்த பல கட்டுரைகளையும் ஆக்கங்களையும். நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். மிகச்சிறந்த கல்வி வளவாளர். அவருடைய கல்விப்பணி ஓய்வு காலத்திலும் தொடர வேண்டும். எல்லாம் வல்ல வித்தக விநாயகன் நல்லாசி அவருக்குக் கிடைப்பதாக

**வைத்திய கலாநிதி மயன் வை.தியாகராஜா,**
**சிரேஷ்ட ஆலோசனைச்சபை உறுப்பினர்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**



### வாழ்த்துரை

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இலங்கையில் முதன்மையானது. அதன் வளர்ச்சி அபரீதமானது. ஆற்றல்.ஆளுமைமிக்கவர்களால் அலங்கரிக்கப்படுகிறது. அதற்கான நிலத்தை உவந்தளித்ததன் சிறப்பை இன்று உணரமுடிகிறது. ஆசிரிய வாண்மைக்கு உதவிடும் இந் நிறுவன பீடாதிபதியின் பணி போற்றுதற்குரியது.பணி ஓய்வு இயல்பானதே. ஓய்வுக் காலத்திலும் அவரது கல்விப் பணி தொடர வாழ்த்துகிறேன்.

தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.



### வாழ்த்துரை

அமைதி, அடக்கம் மிகுந்த ஆழமான புலமை நற்பண்புகள் நிறைவாகக் கொண்டவர். சிறிய புன்சிரிப்புடன் சிக்கலான பிரச்சினைகள் பலவற்றை கையாளுவதில வல்லமை மிக்கவர். நாம் சிக்கலில் பரபரப்புடன் பிரச்சினையைக் கையாளும் போது "கொஞ்சம் பொறுங்கோ!" என எங்களைச் சாந்திப்படுத்தியபின் பிரச்சினைகளை லாவகமாக கையாளுவார். நான் பார்த்த பீடாதிபதிகளுள் மிகவும் நேர்மை மிக்கவர்.

அவர் ஆற்றிய சேவை அவரையும் அவரது மனைவி, பிள்ளைகளையும் நீண்ட ஆயுளோடும் நீடித்த சுகத்தோடும் வாழ எல்லாம் வல்ல இறைவன் துணை நிற்கும்

திரு.பா.பாலகணேசன்,
உபபீடாதிபதி, நிதியும் நிர்வாகமும்.



### சிறந்த தலைமைத்துவவாளன்

மணிவிழா நாயகன் பீடாதிபதி திரு. தி ஜெயகாண்டீபன் அவர்கள் போற்றத்தக்க மிகச்சிறந்த ஆளுமையால் யாழ்ப்பாணம் தேசிய கல்லூரியை வழிநடத்தியவர். கல்வி, நிர்வாகம், தொடருறு கல்வி இவை மூன்றுமே வினைத்திறனாக இயங்குவதற்கு மிகச்சிறந்த பங்களிப்புகளையும் தலைமைத்துவத்தையும் வழங்கி இருந்தார்.

கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் கூடிய கவனம் செலுத்தி அவை வினைத் திறனாக இடம்பெற சிறப்பான பங்களிப்புகளை வழங்கி இருந்தார்.அவர் தனது குடும்பத்தினருடன் சகல சௌபாக்கியங்களையும் பெற்று வாழ இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

**எஸ். ஆர்.சத்தியந்திரம்பிள்ளை,**
**உப பீடாதிபதி, தொடருறு கல்வி**



**பிறப்பு:-**
**03.12.1964 காரைநகர்**
**தாய்தந்தை:-**
**திரு.திருமதி கதிர்காமு திருநானந்தம்/**
**அகிலாண்டேஸ்வரி திருநானந்தம்**
**ஆரம்பக்கல்வி:-**
**யா/மறைஞானசம்பந்த வித்தியாசாலை**
**இடைநிலைக்கல்வி:-**
**யா/ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி**
**உயர்கல்வி:-**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
**திருமணம்:-1998**
**மனைவி:-**
**திருமதி சுபாஜினி ஜெயகாண்டீபன்**
**பிள்ளைகள்:-**
**செல்வன் ஜெயகாண்டீபன் பிரவீன்**
**செல்வன் ஜெயகாண்டீபன் சுஜீவன்**
**செல்வன் ஜெயகாண்டீபன் சபீட்சன்**
**ஆசிரியப்பணி:-**
**யா/யாழ்ற்றன் கல்லூரி**
**கிளி/திருவையாறு மகாவித்தியாலயம்**
**வ/இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி**
**கல்வியியலாளர் பணி:-**
**வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி**
**விரிவுரையாளர், இணைப்பாளர், உபபீடாதிபதி,**
**பீடாதிபதி 2001-2020**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கல்விப்பணி:-**
**உபபீடாதிபதி , பீடாதிபதி -2020-2024**



### பதிவாளரின் வாழ்த்துரை

ஆசிரியராகத் தனது தொழிலை ஆரம்பித்த திரு.தி.ஜெயகாண்டீபன் அவர்கள் விரிவுரையாளராக, உபபீடாதிபதியாக, பீடாதிபதியாக என பல நிலைகளில் கடமையாற்றியுள்ளார். அவர் எக்கருமத்தில் ஈடுபட்டாலும் அதனை செவ்வனே செய்து முடித்துக் கொள்ளும் சிறப்பு மிக்கவர். இவர் ஆசிரிய கல்விக்கு பல்வேறு பங்களிப்புக்களை வழங்கிவருகின்றார். மணிவிழாக் காணும் பீடாதிபதி திரு.தி. ஜெயகாண்டீபன் அவர்கள் ஓய்வுக் காலத்தில் நீண்ட ஆரோக்கியத்துடனும் சீரும் சிறப்புடனும் தனது குடும்பத்தினருடன் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிக்க வேண்டும்

திருமதி.ம.சங்கீதா, பதிவாளர்.



### நிறுவனம் சார் ஆளுமை மிக்க பீடாதிபதி

நல்லவை எண்ணல் வேண்டும். எண்ணிய முடிதல் வேண்டும். திண்ணிய உள்ளம் வேண்டும். தெளிந்த நல்லுறுதி என்பன யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஐந்தாவது பீடாதிபதி திரு.தி.ஜெயகாண்டீபன் அவர்களின் வாழ்வியலில் மலிந்து காணப்பட்டவை இவை.

அவ்வழியில் அவர் கடமை புரிந்த நிறுவனங்களில் தனது நிறுவனம் சார்ஆளுமைச் சிறப்பால் ஆழத் தடம் பதித்து உயர்ந்து கொண்டவர். எமது கல்லூரிகாலச் சூழலால் எதிர்கொண்ட இக்கட்டான சந்தர்ப்பங்களில் மேற்குறிப்பிட்ட ஆளுமைச் சிறப்பால் வெற்றிகாண வைத்தவர்.

அவரது ஓய்வு காலம் சிறப்புற அமைந்திட கல்லூரியில் கோயில் கொண்டிருக்கும்எல்லாம் வல்ல வித்தக விநாயகரைப் பிரார்த்திக்கின்றேன்.

**முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன்,**
**மேனாள் பீடாதிபதி.**



### கடமையுள்ளவர்

பழகுவதற்கு மிகவும் பண்பானவர். ஆசிரிய கல்வித்துறையில் ஆய்வுகள் ஆலோசனைகள், கருத்தரங்குகள், பயிற்சிகள், செயல்நிலை ஆய்வுகள் பாடசாலையைப் புரிந்து கொள்ளுதல் செயற்திட்டம் இணைபாட விதானச் செயற்பாடுகள் என்பவற்றை கல்வியியற் கல்லூரியில் முன்னெடுத்துச் செல்வதில் சிறந்தவராக திரு.தி.ஜெயகாண்டீபன் அவர்கள் திகழ்ந்தார்.

எல்லோரையும் அனுசரித்து நடாத்தும் பண்புடையவர்.மிக உயர்வான பண்பாளன்.

**திரு.S.K.யோகநாதன்,**
**மேனாள் பீடாதிபதி.**



### கல்வியின் கலங்கரை விளக்கு

திரு.தி.ஜெயகாண்டீபன் அவர்கள் தனது விடாமுயற்சியினாலும் திறமையாலும் கல்லூரியின் பீடாதிபதியாகப் பீடம் ஏறும் அளவிற்கு தன்னை உயர்த்திக் கொண்டவர். தன்னடக்கம், பொறுமை, கருணை, ஆழ்ந்த புலமை கொண்ட இவர் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராக இணைந்து பின் உபபீடாதிபதியாகவும் சொற்பநாள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாகவும் கடமையாற்றினார்.

பின்னர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாகக் கடமையேற்று சுமார் ஒரு வருடகாலம் சிறப்பாக சேவை செய்தவர் . தனது கடமையைச் செவ்வனே செய்த செம்மல். இவரின் ஓய்வுக்காலம் சிறப்புற அமைய வேண்டும் என்று இறை ஆசி வேண்டி நிற்கின்றேன்.

**திரு.ச.அமிர்தலிங்கம்,**
**மேனாள் பீடாதிபதி.**



### கல்விப்புல பயணம் தொடரட்டும்

60ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் இந்த முக்கியமான தருணத்தில் திரு.தி.ஜெயகண்டீபன் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த வாழ்த்துகளையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி என்ற வகையில் உங்களது உன்னதமான தலைமைத்துவமும் அர்ப்பணிப்பும் கல்வியியற் கல்லூரிச் சமூகத்திற்கு எழுச்சியூட்டும் வகையில் அமைந்ததையிட்டு மன மகிழ்ச்சியடைகின்றேன்.

**கலாநிதி. சுப்ரமணியம் பரமானந்தம்,**
**மேனாள் பீடாதிபதி.**



### அமைதியும் ஆளுமையும் மிக்க பீடாதிபதி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி உயர்திரு திருநானந்தம் ஜெயகாண்டீபன் மாணவ ஆசிரியர்களின் தொழில்வாண்மை விருத்தி மீது அதீத கரிசனை கொண்டவர். கற்றல், கற்பித்தல் சார்ந்த ஆக்கங்களை மாணவ ஆசிரியர்கள் படைப்பதற்கு வலுவூட்டுபவராகவும் பயன்மிகு கல்விசார் கட்டுரைகளை எழுதிவருவதுடன் கல்வி அளவீடும் மதிப்பீடும் பாடத்துக்கான வழிகாட்டி நூல் ஒன்றையும் கல்விப்புலத்துக்காக தந்தவர். அமைதியும் ஆளுமையும் புலமையும் சிறந்த ஒழுக்கமும் மிக்கவரான இவரை ஆசிரியத்துக்கான சிறந்ததோர் முன்னுதாரணமாகக் குறிப்பிடலாம்.

**திரு.தங்கராசா தவநேசன்,**
**உப பீடாதிபதி, கல்வியும் தரமேம்பாடும்.**



### மிகுந்த மரியாதைக்குரியவர்.

இன்று ஓய்வு பெறும் நாளில் உங்களை வாழ்த்தும் அரிய வாய்ப்பை பெற்றதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் கல்வித் துறையில் நிகழ்த்திய சாதனைகள் அசாதாரணமானவை. கடந்த ஆண்டுகளில் நீங்கள் ஆற்றிய தொண்டும் ஈடுபாடும் எங்கள் அனைவரையும் பெருமைப்படுத்துகிறது. விரிவுரையாளராகத் தொடங்கி உங்களது பல்வேறு பதவிகளில் நீங்கள் சிந்திய உழைப்பும் வியர்வையும், புதிய தலை முறையினருக்கான வழிகாட்டியாக அவர்களின் உளவளத்தை முன்னேற்றுவதில் பங்களிப்புச் செய்ததை எவரும் மறக்க முடியாது.

திரு.அருணாசலம் குகன்,
உப பீடாதிபதி, நிறுவன அபிவிருத்தி.



### விளம்பரம் இல்லாத வித்தகர்

உள்ளத்தனையது உயர்வு என்ற உண்மைக்கு உரையாக உள்ளத்தால் உயர்ந்து ஆசிரிய மாணவர்களையும் உயர்த்திய பீடாதிபதி. அன்பு, அமைதி,பொறுமை,நேர்மை,சகிப்புத் தன்மை அத்தனைக்கும் சொந்தக்காரன். மற்றவர் கள் மனம் நோகாது முகாமைத்துவத்தினை முன்னெடுப்ப வர். தூர நோக்கு, சரியான திட்டமிடல், பக்குவமான முகாமைத்துவம், தன்னலமற்ற சேவை எனப் பல நல்ல அம்சங்களைக் கொண்டு செயற்படும் இவரது சேவை மகத்தானது.

**திருமதி.ஜெ.உதயகுமார்,**
**தலைவர்,கல்வியியலாளர் கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

போர்ப்பதற்றம்!

## தென்கொரிய எல்லைக்குள் சீன, ரஷ்ய விமானங்கள்



(பியாங்யாங்)

தென் கொரியாவின் வான் எல்லைக்குள் 11 சீன மற்றும் ரஷ்ய இராணுவ விமானங்கள் வட்டமடித்தன. இதனால் தென் கொரியா வில் போர்ப்பதற்றம் ஏற்பட் டது.

தென் கொரியாவின் வான் பாதுகாப்பு மண்டலத்திற் குள் 5 சீன இராணுவ விமா னங்களும், 6 ரஷ்ய இராணுவ விமானங்களும் நுழைந்ததாக அந் நாட்டு இராணுவம் அறிவித்தது.

இதனை தொடர்ந்து தென் கொரியாவின் இரா ணுவம் போர் விமானங் களை ஏவியது. இதனால் தென் கொரி யாவில் போர்ப் பதற்றம் ஏற்பட்டது.

கிட்டத்தட்ட 4 மணி நேரம் தென் கொரியாவின் வான் பாதுகாப்பு மண்ட லத்திற்குள் வட்டமடித்த 11 சீன மற்றும் ரஷ்ய இரா ணுவ விமானங்கள் பின் னர் பாதுகாப்பாக வெளியேறின.

முன்னறிவிப்பின்றி சீன மற்றும் ரஷ்ய இராணுவ விமானங்கள் தென் கொரிய வான் பாதுகாப்பு மண்ட லத்திற்குள் பறந்ததற்கு தென்கொரியா எதிர்ப்பு தெரிவித்தது.

சீன மற்றும் ரஷ்ய இராணுவ விமானங்கள் தென் கொரியாவின் வான் பாதுகாப்பு மண்டலத்திற் குள் ஊடுருவுவது சமீ பத்திய ஆண்டுகளில் அடிக்கடி நிகழும் நிகழ் வாகிவிட்டது குறிப்பிடத்தக் கது. (நி-8)

## நேட்டோவின் கீழ்

## போரை நிறு

## உக்ரைன் ஜனா

(வோஷிங்டன்)

**ரஷ்யாவினால் ஆக்கிரமிக்கப்படாத பகுதிகளை நேட்டோவின் கீழ் கொண் ரஷ்யாவுடனான போரை நிறுத்த முடியும் என் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்**

ரஷ்யா-உக்ரைன் இடை யிலான போர் ஆயிரம் நாட் களைக் கடந்து நீடித்துக் கொண்டிருக்கிறது. இதில் உக்ரைனுக்கு அமெரிக்கா உதவி வருகிறது.

சமீபத்தில் முதல் முறை யாக அமெரிக்க ஏவுக ணையை பயன்படுத்தி ரஷ்யா மீது உக்ரைன் தாக் குதல் நடத்தியது. இதனால் ரஷ்யா போரில் முதல் முறையாக கண்டம் விட்டு கண்டம் பாயும் ஐ.சி.பி.எம் ஏவுகணையை பயன்படுத்தித் தாக்கு தல் நடத்தியது.

மேலும் உக்ரைனுக்கு உதவும் நாடுகளுக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் எச்சரிக்கை விடுத்தார். உக்ரைன் போரில் பயன்படுத்து வதற்காக ஹைப்பர்சோனிக் ஏவு

## படகு கவிழ்ந்து விபத்து!

- 27 பேர் உயிரிழப்பு
- 100 பேர் மாயம்
- நைஜீரியாவில் சோகம்

(நைஜீரியா)

நைஜீரியாவின் வடக்கு பகுதியில் பயணிகளை ஏற் றிக்கொண்டு நைஜர் ஆற் றில் சென்றுகொண்டிருந்த படகு திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கோகி மாநிலத்தில் இரு ந்து அண்டை மாநிலமான நைஜர் நோக்கி சென்ற அந்த படகில் 200இற்கும் மேற்பட்டோர் பயணித்துள் ளனர். நீச்சல் தெரிந்த சிலர் கரையை அடைந்துள்ள னர்.

உள்ளூரைச் சேர்ந்தோர் சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். அவசரகால மேலாண்மை நிறுவன மீட்புக் குழுவினரும் சம்பவ இடத்திற்கு வந்து மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.



மீட்பு பணியின்போது 27 பேர் சடலமாக மீட்கப் பட்டனர். சுமார் 100 பேரின் நிலை என்ன என்பது தெரிய வில்லை.

அவர்களில் பெரும்பாலா னோர் பெண்கள் ஆவர். அவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெறுகி றது.

எனவே இந்த விபத்தில் ஏராளமானோர் பலியாகியி ருக்கலாம் என அஞ்சப்படுகி றது.

படகு மூழ்கியதற்கான காரணம் குறித்து அதிகாரி கள் இதுவரை உறுதி செய்ய வில்லை. எனினும் அள வுக்கு அதிகமாக பயணி களை ஏற்றிச் சென்றதால் படகு கவிழ்ந்திருக்கலாம் என கருதப்படுகிறது. (நி-8)

## சிரியாவில்

## உள்நாட்

(டமாஸ்கஸ்)

மத்திய கிழக்கு நாடான சிரியாவில் மீண்டும் உள் நாட்டுப் போர் வெடித் துள்ளது. சிரியா ஜனாதி பதியாக பஷர் அல் அசாத் கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் ஆட்சியில் உள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு சிரியாவில் வேலைவாய்ப்பு பிரச்சினை உள்ளிட்ட கார ணங்களால் ஜனாதிபதி பஷர் ஆட்சிக்கு எதிராக நடந்த போராட்டங்கள் உள் நாட்டுப் போராக வெடித் தது.

பஷரை ஆதரிப்போர் மற்றும் எதிர்ப்போர் என இரு பிரிவினருக்கும்இடையே ஏற்பட்ட மோதலில் பலர் கொல்லப்பட்டனர். ரஷ்ய ஜனாதிபதி புடின் தலையீட் டால் பஷர் தனது ஆட்சி யைத் தக்கவைத்துக்கொண் டார்.

போராட்டக்காரர்களை ஒடுக்க ரஷ்யா பஷருக்கு பேருதவி செய் தது.

2012 ஆம் ஆண்டுமுதல் போரா ட்டக்காரர்களின் கட்டுப்பாட்டிலிருந்த கிழக்கு அலெப்போ நகரை ரஷ்யா தனது விமானப்படை மூலம் மீட்டு 2016 ஆம் ஆண்டில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்திடம் மீண்டும் ஒப்படைத்தது.

அதன் பிறகான காலத்தில் சிறிய அளவிலான எதிர்ப்பு அங்காங்கே போராட்டங்கள் என்ற அளவில் மட்டுமே இருந்த நிலையில் தற்போது மீண்டும் உள்நாட்டுப் போராக மாறியுள்ளது.

முந்தைய போராட்டங்களில் தீவிரமாகச் செயற்பட்ட ஹயாத் தஹ்ரிர் அல் ஹாம் கிளர்ச்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் வந்தால்

# றுத்தலாம்!

## திபதி தெரிவிப்பு

த உக்ரைன்
ன்டு வந்தால்
ன்று உக்ரைன்
ர்.



கணைகளை அதிகளவில் தயாரிக்க புடின் உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றதில் இருந்து உக்ரைன் - ரஷ்யா போர் நிறுத்தம் குறித்தும் அமைதி ஒப்பந்தம் குறித்த பேச்சு வார்த்தை நடப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி-30)

# ல் வெடித்த

# ட்டு போர்!



அமைப்பினர் திடீரென மீண்டும் இராணுவத்துடன் சண்டையைத் தொடங்கியுள்ளனர்.

அமரிக்கா மற்றும் ஐநா சபையால் பயங்கரவாத அமைப்பாக வரையறுக்கப்பட்ட இதன் தலைவராக அபு முகமது அல்- கோலானி உள்ளார்.

முந்திய காலங்களில் அல் கொய்தா உடன் நெருங்கிய உறவை இவ்வமைப்பு பேணி வந்துள்ளது.

இந்நிலையில் தற்போது வடமேற்கு சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் தாக்குதலில் இலட்சக்கணக்கான படையினர் கொல்லப்பட்டதாக சிரியா இராணுவம் தெரிவித்துள்ளது. மேலும் கிளர்ச்சியாளர்கள் அலெப்போ நகரின் பெரும்பகுதியைக் கைப்பற்றியுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது. இதனால் அலெப்போ நகரில் இருந்து இராணுவம் தற்காலிகமாக பின்வாங்கி உள்ளது.

மேலும் அலெப்போவில் மையம் கொண்டுள்ள கிளர்ச்சியாளர்கள் மீது இராணுவம் தொடர்ந்து குண்டுவீச்சு நடத்தி வருவதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அலெப்போ புறநகர்ப் பகுதியில் ரஷ்ய மற்றும் சிரிய போர் விமானங்கள் கிளர்ச்சியாளர்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸ் இல் இருந்து 350 கிலோமீற்றர் தொலைவில் வடக்கு பகுதியில் உள்ள அலெப்போ நகர் வரலாற்று காலம் தொட்டே சிரியாவில் முக்கிய நகரமாக விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (நி-8)

## ரயில் நிலையத்தில் தீ விபத்து 200 வாகனங்கள் எரிந்து நாசம்



(டில்லி)

வாரணாசி ரயில் நிலையத்தில் உள்ள வாகன நிறுத்துமிடத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் 200 வாகனங்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியின் கான்ட் ரயில் நிலையத்தில் வாகன நிறுத்துமிடத்தில் நேற்று முன்தினம் அதிகாலை இந்த தீ விபத்து ஏற்பட்டது.

தீயை அணைக்கும் பணியில் 12 தீயணைப்பு வாகனங்களுடன் தீயணைப்புப் படையினரும் பொலிஸ் அதிகாரிகளும் ஈடுபட்டனர். அரசு ரயில்வே காவல்துறை ரயில்வே பாதுகாப்புப் படை குழுக்களும் தீயை அணைக்க உதவினர்.

தீவிரமான அளவு தீ பரவியபோதும் அதிஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை. (நி-8)

## டொலர் மட்டும் தான் பயன்படுத்தனும் பிரிக்ஸ் நாடுகளுக்கு எச்சரிக்கை

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்க உள்ள டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க டொலருக்கு பதிலாக மற்றொரு நாணயத்தை உருவாக்கவோ அல்லது ஆதரிக்கவோ கூடாது என பிரிக்ஸ் உறுப்பு நாடுகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் நாடுகள் 100 சவீத வரிகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என்று அவர் மேலும் எச்சரிக்கை விடுத்தார்.

பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் புதிதாக எந்த நாணயத்தையும் உருவாக்கக் கூடாது.

மேலும் ஏற்கனவே இருக்கும் வேறு நாட்டு நாணயத்தையும் பயன்படுத்தக் கூடாது.

சர்வதேச வியாபாரங்களுக்கு பிரிக்ஸ் நாடுகள் அமெரிக்க டொலரை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

இதை மாற்ற நினைக்கும் நாடுகளுக்கு 100 சதவீதம் வரை கூடுதல் வரி விதிக்கப்படும்.

அவர்களுக்கு வேறொரு ஏமாளி கிடைத்தால் அவர்களுடன் வியாபாரம் செய்யட்டும். டொலர் வேண்டாம் என்றால் அமெரிக்காவுடன் உள்ள உறவையும் துண்டித்துக்கொள்ளுங்கள் என்று டொனால்ட் ட்ரம்ப் பதிவிட்டுள்ளார். (நி-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முச்சக்கரவண்டி, பேருந்து கட்டணங்களில் மாற்றமில்லை

(கொழும்பு)

எரிபொருளின் விலையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பேருந்து கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படமாட்டாது என தேசிய போக்குவரத்து சபை அறிவித்துள்ளது.

இதேவேளை தனியார் பேருந்து கட்டணத்திலும் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் முச்சக்கர வண்டி கட்டணங்களை குறைப்பதற்கு பெற்றோலின் விலையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் போதாது என அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருளின் விலையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# காரைநகர் வைத்தியசாலைக்கு வைத்தியர் சிறீபவானந்தராஜா விஜயம்

(யாழ்ப்பாணம்)

தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் எஸ். சிறீபவானந்தராஜா காரைநகர் பிரதேச வைத்தியசாலைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் வைத்திய சாலை சம்பந்தமாக கலந்துரையாடியதுடன் வைத்திய சாலையின் நிலைமை தொடர்பில் ஆராய்ந்தார்.

அத்துடன் வைத்தியசாலையின் அபிவிருத்தி குழுவினரையும் சந்தித்திருந்தார்.

மேலும் வைத்திய சாலை வைத்தியர்களுடன் கலந்துரையாடிய வைத்தியர் காரைநகர் பிரதேசத்தில் அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்து இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கான நடமாடும் மருத்துவ சேவையினை முன்னெடுக்குமாறும் கேட்டுக் கொண்டார். (நி-8-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 400 | 400 | 300 | 400-450 | 350 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 220 | 220 | 280 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 600 | 300-400 | 300 |
| தக்காளி | 550 | 650 | 400 | 650 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 220 | 100-120 | 180 |
| கோவா | 300 | 300 | 250 | 280 | 400 |
| கரட் | 250 | 300 | 300 | 260 | 320 |
| பூசணி | 140 | 130 | 150 | 130 | 200 |
| புடோல் | 200 | 300 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 100 | 80 | 150 | 60 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 280 | 350 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 320 | 300 | 380 | 400 |
| பாகற்காய் | 600 | 1800 | 1000 | 750 | 1600 |
| வெண்டக்காய் | 300 | 220 | 200 | 250-300 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 180 | 120 | 240 |
| பயற்றங்காய் | 600 | 600 | 600 | 600-850 | 800 |
| லீக்ஸ் | 300 | 350 | 300 | 250 | 400 |
| பீற்றூட் | 200 | 300 | 250 | 300 | 400 |
| கறிமிளகாய் | 800 | 800 | 800 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 600 | -- | 1000 | 700 | 800 |
| போஞ்சி | 500 | 600 | 600 | 460 | 800 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | 300 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 150 | 140 | 150 | -- | 200 |
| தேசிக்காய் | 600 | 500 | 700 | 400-550 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 180 | 150 | 80-180 | 120-180 |
| இராசவள்ளி | -- | 900 | 1000 | 650 | 1200 |
| வெங்காயப்பூ | -- | -- | 600 | -- | -- |
| முள்ளங்கி | 150 | 150 | 200 | 120 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 30 | 80 | 120 | 100 |
| ஈரப்பலா | 150 | 100 | 100 | 80 | 150 |

# இன்று ஒரு தகவல் 275



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## அவமானம்

வாழ்க்கையிலே ஒரு சில சந்தர்ப்பங்களிலே நாம் சில அவமானங்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. என்ன செய்வது காலம் அப்படி? அவமானப்படுவர்கள் உடனே அடங்கிப் போவது தான் உலக வழக்கம். ஆனால் அவமானப்பட்ட உடனே சீறி எழுபவர்களும் உண்டு. ஆனால் அதையே ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு முன்னுக்கு வருபவர்களும் சில பேர் இருக்கின்றார்கள். அவர்கள் மிகவும் அபூர்வம்.

இன்றைக்கு மனோதத்துவ நிபுணர்கள் எல்லாம் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

அவமானப்பட்டு விட்டால் உடனே அடங்கிப் போய் விட கூடாதாம். அதையே ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு மனதிலே ஒரு வைராக்கியத்தோட முயற்சி செய்தால் வாழ்வில் முன்னேற முடியும் .அவமானம் என்பதை நாம் வைராக்கியமாக மாற்றிக் கொள்ள வேண்டும். அது தான் வெற்றிக்கு வழி.ராமர் இந்த பூமியிலே பிறந்ததே ஒரு வைராக்கியத்தினாலே தான் என்றார் ஒருவர். எப்படி அது என்று கேட்டேன்.

அதாவது தசரதருக்கு ராமர் குழந்தையாக வந்து பிறக்க வேண்டும். அப்ப தான் இங்கே இருக்கின்ற கஷ்டங்கள் எல்லாம் நீங்கும். என்று சர்வலோகமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அவர் எப்ப வந்து பிறப்பார் என்று யாருக்கும் தெரியவில்லை. அந்த காரியம் சீக்கிரம் நடக்க வேண்டுமே. அதுக்கு என்ன செய்வது?

நாரதர் ஒரு நாள் தசரதரைத் தேடி வந்தார். தசரதா உனக்கு ஒரு செய்தி தெரியுமா என்று ஆரம்பித்தார்.அவர் எப்பவும் இப்படித்தானே ஆரம்பிப்பது வழக்கம். என்ன விடயம் என்று கேட்டார் தசரதர்.தசரதா நீ அடிக்கடி உன்னுடைய தேரிலே ஏறிக் கொண்டு தேவலோகத்திற்குப் போகின்றாய் ,வருகிறாய் எல்லாம் சரி தேவலோகத்தில் உன்னை நல்லபடியாகத்தான் வரவேற்கிறார்கள். தேவேந்திரன் உன்னை நல்லபடியாகத்தான் வரவேற்கிறார்கள்.

தேவேந்திரன் உன்னை பிரியமாய் அழைத்துக் கொண்டு போய் தன்னுடைய உரியா சனத்திலேயே தனக்குப் பக்கத்திலே உட்கார வைத்துக் கொள்கிறான் நீயும் சந்தோசமாக உட்கார்ந்து பேசிக் கொண்டு வந்துவிடுகிறாய். ஆனால் நீ இங்கே வந்ததுக்கு பின்பு அங்கே என்ன நடக்கிறது உனக்கு தெரியுமா என்றார் நாரதர்.

என்ன நடக்கிறது. எனக்கு ஒன்றும் தெரியலையே என்றார் தசரதர்.

நாரதரிடம் வந்தார். மெதுவாக அவர் காதோட காதா சொன்னார். எங்கள் பாசையிலே சொன்னால் பத்தவச்சார்.

நீ அங்கே தேவேந்திரனிடம் உட்கார்ந்து பேசிவிட்டு வந்த பிறகு நீ அங்கே உட்கார்ந்திருந்த அரியாசனத்தைத் தண்ணீர் ஊற்றிச் சுத்தப்படுத்துகிறார்கள். நீ என்ன அந்த அளவுக்குச் சுத்தமில்லாத ஆளா என்று கேட்டார். தசரதனுக்கு இது மிகவும் அவமானமாகப் போய்விட்டது. அப்படியா செய்கிறார்கள் என்று கேட்டார். ஆமாம் நீ வேண்டும் என்றால் நான் சொல்வது உண்மையா இல்லையா என்பதை சோதித்துப் பார்த்துக்கொள் என்றார் நாரதர். உடனே தசரதர் இதுக்காகவே புறப்பட்டு தேவலோகம் போனார். அங்கே வழக்கம் போலவே இவரைக் கூப்பிட்டு உட்கார வைத்துப் பேசிக் கொண்டிருந்தான் தேவேந்திரன். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு சரி நான் கிளம்புகிறேன் என்று புறப்பட்டான்.அவனும் வாசல் வரைக்கும் வந்து வழி அனுப்பிவிட்டு உள்ளே போனான். தசரதன் வெளியே கொஞ்ச நேரம் மறைந்து இருந்து விட்டு மெதுவாக உள்ளே எட்டிப்பார்த்தார் என்ன நடக்குதென்டு. நாரதர் சொன்னது சரிதான். தசரதர் உட்கார்ந்திருந்த ஆசனத்தை அங்கே இரண்டு தேவர்கள் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார்கள். தசரதராலே இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவருக்கு மிகவும் அவமானமாகப் போய்விட்டது.

கிடு கிடு என்று தெய்வேந்திரனிடம் போனார். நான் உட்கார்ந்திருந்த இருக்கையை சுத்தம் செய்கிறாயே நான் என்ன அந்தளவுக்குப் பாவியா என்று கேட்டார் மிகவும் கோபமாக.

தசரதரே மனிதனுக்கு மூன்று கடன்கள் உண்டு. தேவ கடன் ,ரிசிகடன் ,பித்துரு கடன் இதைத் தீர்க்காதவன் பாவியாகிறான்.இதிலே மகனைப் பெறுவதால் தான் பித்துரு கடன் தீரும்.உனக்கு மகன் இல்லை அதனால் நீ பாவியாகிறாய். பாவி உட்கார்ந்திருந்த இடம் என்பதால அதைச் சுத்தம் செய்வது எங்கள் கடமை என்கிறார் தெய்வேந்திரன். இந்த இடத்தில் தசரதருக்கு ஏற்பட்ட அவமானம் மாறிவிட்டது.தேவேந்திரரே கேட்டுக் கொள்ளுங்கள் ஒரு மகனைப் பெற்றபிறகு தான் இந்த சபையிலே மறுபடியும் அடி வைப்பேன் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

போய் புத்த காமேஸ்ரி யாகம் செய்தார். புத்திரர்கள் பிறந்தார்கள். இந்தக் கதையிலே உள்ள கருத்து என்ன வென்றால் தேவேந்திரன் தசரதனை அப்படி அவமானப்படுத்த வில்லை என்றால் அவருக்கு இப்படி ஒரு வைராக்கியம் பிறந்திருக்குமா? யோசித்துப் பாருங்கள். நமக்கு ஏற்படுகின்ற சில அவமானங்களையும் வைராக்கியமாக மாற்றுவோம். வாழ்க்கையில் முன்னேறுவோம். எங்களில் சில பேர் அவமானத்தை வைராக்கியமாக மாற்றுவது எப்படித் தெரியுமா? என்னிடம் ஒரு பையன் சொன்னார் எங்கள் அப்பா என்னை எல்லோருக்கும் முன்னால் வைத்துத் திட்டிவிட்டார். பொறுப்பில்லாமல் ஊர் சுத்துறாய் என்று சொல்லி அவமானப்படுத்திவிட்டார்.இனிமேல் நீ என் முகத்திலே முழிக்காதேடா போடா என்று சொல்லிவிட்டார். எனக்கு ரோசம் வந்துவிட்டது அந்த அவமானத்தை வைராக்கியமாக மாற்றிவிட்டேன். அன்றிலிருந்து அவர் முகத்திலேயே முழிப்பது இல்லை என்றான்.அப்படியா என்றேன். ஆமாம் அவர் வீட்டிலே இல்லாத நேரம் பார்த்து உள்ளே சமையல் கட்டுக்குப் போய் சாப்பிட்டுவிட்டு நைசாக வெளியிலே வந்துவிடுவேன் என்று சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு

# உடனடியாக இழப்பீடுகளை வழங்குமாறு கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுமாவட்டத்தில் 23,930ஏக்கர் பெரும்போக நெற்செய்கை கனமழை காரணமாக வெள்ளநீரில் மூழ்கிக் காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ஆர். பரணீகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரி விக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் 23,930ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளநீரில் மூழ்கியுள்ளன.

வயல் நிலங்களில் தேங் கியுள்ள வெள்ளம் வடிந்த பின்பே பாதிப்பு நிலைமைகள் குறித்து மதிப்பீடு செய்ய முடியும்.

தற்போது மழைவீழ்ச்சி அளவு குறைந்திருப்பதால் வயல் நிலங்களை மூடியிருக்கின்ற வெள்ள நீர் படிப்படியாக குறைவடைகின்றது என அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

விவசாய பாதிப்பு நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்கு குறிப்பிட்டளவு நாட்கள் தேவை என திணைக்கள அதிகாரிகள் கூறுவதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால் கூடிய விரைவில் விவசாய பாதிப்பு நிலைமைகளை மதிப்பீடுசெய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடுகளை உடனடியாக வழங்க உரிய திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனத் தெரிவித்தார். (நி-8-299)


உதைபந்தாட்ட சாகரம், வாழ்நாள் சாதனையாளர்

மாமனிதர் அமரர். D.M.வேதாபரணம்

அவர்களின்

ஐந்தாம் ஆண்டு நினைவுநாள்

ஆண்டு ஐந்து போனாலும் உங்கள்
நினைவுகள் எங்கள் மனதில்
என்றென்றும் நிறைந்திருக்கும்
காலங்கள் உருண்டோடலாம்
ஆனாலும் கண்முன்னே
நிழலாகும் உங்கள் நினைவுகள்
ஒருபோதும் எங்களை விட்டு அகலாது
நீங்கள் விட்டுப்போன வெற்றிடத்தில்
எதை இட்டு நிரப்புவோம்
எம் நெஞ்சுக்குள் வாழும் உங்கள்
நினைவுகள் எப்போதும் எம்
நெஞ்சை விட்டுப்போகாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-1695)



அன்னை மடியில் 1944.06.15
ஆண்டவன் பிடியில் 2019.12.02

புனிதம் வதிரி குடும்பத்தினர்.


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



**Botanical name- Persea americana**
**Family- Lauraceae**
**Engl-Butter Fruit**

## சீமைக்கொய்யா/அவகோடா பழம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

அவகோடா பழமானது மத்திய அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்டது. ஆனாலும் இலங்கையில் நல்ல பழ விளைச்சலைத் தரக்கூடிய பழமரமாக வளரக்கூடியது. மர வகையைச் சேர்ந்தது. ஆரோக்கியமான கர்ப்பத்துக்கு உதவக் கூடியது. குறைப்பிரசவத்தையும் தவிர்க்க உதவுகிறது. மன அழுத்தத்தையும் குறைத்து நரம்பு மண்டல செயற்பாடுகளை சீராக்கும். அவகோடா பழம் நிறைய சத்துக்கள் நிறைந் தது. பழங்களிலேயே அதிக கொழுப்புச்சத்து நிறைந்த பழம். 200 கிராம் பழத்தில் கிட்டத்தட்ட 30 கிராம் கொழுப்புச்சத்து உண்டு. ஆனாலும் இந்த கொழுப்பு ஆரோக்கியமான கொழுப்பு வகையாகும்.

அந்த வகையில் எல்லோரும் அவகோடா பழம் சாப்பிடலாம். இருதயத்தின் ஆரோக்கியத்திற்கு நல்லது. இதில் பொட்டாசியம் சத்து அதிகளவில் காணப்படுகிறது. கெட்ட கொழுப்பை குறைத்து நல்ல கொழுப்பை அதிகரிக்கச் செய்யக்கூடியது. சுவை இருக்காது. நடுவே ஒரு பெரிய விதையைக் கொண்டிருக்கும்.

பழத்தினை துண்டுகளாக வெட்டி தோலை நீக்கி துண்டுகளாக மீண்டும் வெட்டி தேன் விட்டு சாப்பிடலாம். நிறைய உயிர்ச்சத்துக்கள் உண்டு. இதன் மெல்லிய மஞ்சள் நிறத்திற்கு காரணமே உயிர்ச்சத்து A ஆகும். இதைவிட உயிர்ச் சத்து C22 வீதம், உயிர்ச்சத்து E,K,B விற்றமின்களும் உண்டு. உயிர்ச்சத்து B குறைபாடுகளாலும் தோல் பிரச்சினைகள், வாயில் புண் பிரச்சினைகள் போன்றன ஏற்பட இடமுண்டு.

எனவே உயிர்ச்சத்து B உள்ள உணவுகள், பழங்களை தினமும் எடுத்துக் கொண்டால் வாய்ப்புண், மன அழுத்தத்தால் ஏற்



படும் குடற்புண் போன்றவை நன்றாகவே குறையும். 200 கிராம் அவகோடா பழத்தில் 322 கலோரிகள் கிடைக்கும். விலையும் அதிகம். சில பருவக் காலத்துக்கே கிடைக்கும்.

ஆனாலும் எமது மண் வளத்தில் நன்றாக வளரக் கூடியது. உங்கள் வீட்டுத் தோட்டங்களில் அவகோடா பழ மரத்தை வைத்து உண்டாக்கி பயன்பெறலாம். இந்தப் பழம் சாப்பிடும்போது வளவளப்புத் தன்மையை உணருவீர்கள். அதற்கு காரணம் இந்த வெண்ணெய் பழத்திலுள்ள கொழுப்புகள். அதனால்தான் ஆங்கிலத்தில் Butter Fruit என அழைப்பர். வாரத்தில் இரண்டு நாட்களாவது இந்தப் பழத் தைச் சாப்பிடலாம். இப் பழத்திலுள்ள நார்ச்சத்தானது ஜீரண மண்டலத்தை சீராக இயங்க வைக்க உதவும். எமது குடலில் ஆரோக்கியமான பக்றீரியாக்கள் உருவாவதற்கு இந்த அவகோடா பழம் உதவிபுரிகின்றது.

ஆரோக்கியமான பக்றீரி யாக்கள் குடலில் இருக்கும் போது எமது பித்த நீர் சுரப்பை கட்டுப் படுத்தி சீராக வைத்திருக்கிறது. எனவே குடலில் பிரச்சினைகள் வராமல் ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது. உடம்பில் பித்தநீர் அதிகமாகும் போது தான் குடலில் பிரச்சினைகள் ஏற்படும். எனவே அவகோடா பழம் சாப்பிடும்போது மேற்படி பிரச்சினைகளை தவிர்த்துக்கொள்ளலாம்.

இப்பழத்திலுள்ள Antioxidants நரம்பு மண்ட லத்தை பாதுகாப்பாக வைத்திருக்க கூடியது. (Neuro Protective) அத்துடன் இதிலுள்ள சத்துக்கள் என்புகளையும் பலப்படத்தக் கூடியது. பெரும்பாலும் பெண்கள் கர்ப்பகாலத்திலும் சரி, பாலூட்டும் காலங்களிலும் சரி இப்பழத்தை சாப்பிட வேண்டும்.

இக்காலங்களில் பெண்களுக்கு தேவையான போசா க்குக் கூறுகள் அனைத்தும் அவகோடா பழத்திலுண்டு. நிறையபேர் அவகோடா பழம் சாப்பிட்டால் உடல் எடை அதிகரிக்கும் எனக் கூறுவார்கள். அப்படி இல்லை. ஏனெனில் இப்பழத்தில் Omega 3 Fattiacids மற்றும் நார்ச்சத்தும் காணப்படுவதால் எமது உடலில் அனுசேப இயக்கத்தை சீராக்கி உடல் எடையை அதிகரிக்க விடமாட்டாது. கெட்ட கொழுப்பையும் கழிவுகளையும் நீக்கக்கூடியது.

ஆய்வுகளின் முடிவின்படி ஒரு அவகாடோ பழத்தை காலை உணவாக தினம் ஒரு பழத்தை விதைநீக்கி, தோல் சீவி துண்டுகளாக வெட்டி சாப்பிடக்கொடுக்கும் போது சாப்பிட்டு 5 மணித்தியாலங்களிற்கு பசி உணர்வு ஏற்படாததை பலபேரில் அவதானிக்கப்பட்டது. பசி உணர்வு குறைவதால்மேலதிகமான உணவுகள் எடுப்பதையும் தடைசெய்யும்.

இதனால் உடல் எடை குறைவதாக ஆய்வுகளும் எடுத்துக் காட்டுகின்றது. ஆனாலும் இப்பழத்தை யூஸாக அடித்து குடிக்கக்கூடாது. துண்டுகளாகத்தான் சாப்பிட வேண்டும்.

உயிர்ச்சத்து A இப்பழத் தில் காணப்படுவதால் கண் பார்வையையும் நன்றாக ஆரோக்கியமாக வைத்திருக்கக்கூடியது. இப்பழத்தில் Omega-3 Fatty auds காணப்படுவதால் மூளை வளர்ச்சியை மேம்படுத்தக் கூடியது. (Boost Brain Health). இப்பழத்தில் Lutein, Zeaxanthin போன்ற Antioxidants காணப்படுவதால் புற்றுநோய் வராமலும் தடுக்கக் கூடியது.

சருமத்தின் காவலன் வெண்ணெய்ப்பழம் என அழைக்கப்படும் அவகாடோ பழமா கும். முக அழகிற்கு அவகோடா பழத்தை தோல் சீவி நன்கு பிசைந்து தூயதேன் சிறிது கலந்து மீண்டும் பிசைந்து முகம், கழுத்துப் பகுதிக்கு பூசிவர முகம், கழுத்து சரு மம் பளபளப்பாக மாறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 645





ஆழ்வார்க்கடியான் வேறொரு இரகசிய வேலையில் ஈடுபட்டிருக்கிறான் என்றும் தன்னுடன் வர மாட்டான் என்றும் வந்தியத்தேவன் நிச்சயமடைந்தான். சரி உமது இஷ்டம்! என்று கூறிக் குதிரைமீது தாவி ஏறிக்கொண்டான். தான் போக வேண்டிய திசையை நோக்கினான். வடகிழக்குத் திசையின் அடிவாரத்தில் கரியமேகங்கள் திரள்வதைக் கண்டான்.

வைஷ்ணவரே! இன்று மழை பெய்யுமா? என்று கேட்டான். அப்பனே! எனக்கு என்ன ஜோசியமா தெரியும்? ஐப்பசி பிறந்து விட்டது அல்லவா? மழை பெய்தாலும் பெய்யும். எல்லாவற்றுக்கும் சீக்கிரமாக குதிரையைத் தட்டி விட்டுக் கொண்டுபோ! இராத்திரி தங்குவதற்கு ஏதேனும் ஒரு சத்திரம் சாவடியைப் பார்த்துக்கொள்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

வந்தியத்தேவன் அவ்விதமே குதிரையைத் தட்டி விட்டான். "எனக்கு என்ன ஜோசியமா தெரியும்?" என்று ஆழ்வார்க்கடியான் கேட்டது அவனுடைய மனத்தில் பதிந்திருந்தது. இதிலிருந்து குடந்தை சோதிடரின் நினைவு வந்தது. போகும் வழியிலேதான் அந்தச் சோதிடரின் வீடு இருக்கிறது அவரைப் பார்த்துவிட்டுப் போனால் என்ன? சோழ சிம்மாசனம் ஏற ஆசைப்படுகிறவர்களுக்குள்ளே யாருக்கு இந்த அதிஷ்டம் கிடைக்கப்போகிறது? பொன்னியின் செல்வரைத் துருவ நட்சத்திரத்துக்குச் சமமானவர் என்று குடந்தை சோதிடர் சொன்னாரல்லவா? அவரோ இராஜ்யம் ஆளுவதில் மனதை செலுத்தவே மறுக்கிறார்! இலங்கைச் சிம்மாசனத்தையும் மணி மகுடத்தையும் எவ்வளவு அநாவசியமாக மறுதளித்தார்? அவருக்குப் பல கண்டங்கள் நேரிடுமென்று சோதிடர் கூறியது ஓரளவு பலித்துத் தானிருக்கிறது. அது போலவே வருங்காலத்தில் அவர் மகோன்னதம் பெற்று விளங்குவார் என்பதும் பலிக்குமா? அது எப்படிச் சாத்தியமாகக் கூடும்? என்னுடைய வாழ்க்கைக் கனவுகள்தான் எவ்வளவு தூரம் பலிக்கப் போகின்றன? என் முன்னோர்கள் காலத்தில் இழந்து விட்ட இராஜ்யம் திரும்பக் கிடைக்குமா? நான் இப்போது எதற்காகப் புறப்பட்டிருக்கிறேனோ அது எவ்வளவு தூரம் நிறைவேறும்? ஆதித்த கரிகாலர், நந்தினி இவர்களுக்குக் குறுக்கே நின்றுதான் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியுமா? இதுவரையில் இரண்டு மூன்று தடவை நந்தினியிடம் சிக்கிக் கொண்டு தப்பிப் பிழைத்தோம்! மறுபடியும் அது முடியுமா? பழுவூர் இளைய ராணியை எண்ணியபோது வந்தியத்தேவனுடைய மனத்தில் ஒரு திகில் உண்டாயிற்று. அவள் அவனிடம் மிக்க பிரியமும் மரியாதையும் காட்டிப் பேசியதென்னவோ உண்மைதான்! ஆனால் அவள் உள்ளத்தை அவனால் அறிய முடியவில்லை. ஏதோ ஒரு முக்கிய காரிய நிமித்தமாக அவனை அவள் விட்டு வைத்திருப்பதாகவே தோன்றியது. அதனாலேயே வந்தியத்தேவனிடம் அவள் அவ்வளவு பொறுமையாக இருந்திருக்கிறாள். அது என்ன காரியமாக இருக்கும்?

வந்தியத்தேவனுடைய குதிரை சற்றுமுன் அந்த வழியே சென்ற பல்லக்கைத் தாண்டிச் சென்றது. இம்முறை அவன் பல்லக்கை மோதவும் விரும்பவில்லை. பல்லக்கு அவனை மோதவும் இஷ்டப்படவில்லை. ஆனால் குதிரை பல்லக்கைத் தாண்டியபோது பல்லக்கின் திரை சிறிது விலகியது. உள்ளே வீற்றிருந்த பெண் . கொடும்பாளூர் இளவரசி வானதி என்பதை அறிந்து கொண்டான். குதிரையை நிறுத்தலாமா என்று ஒரு கணம் யோசித்தான். பிறகு அதை மாற்றிக்கொண்டு மேலே சென்றான்.

(தொடரும்)



## சிறுவர் அரங்கம்

# நம்பிக்கை மோசம்!



ஊரெல்லாம் கடன் வாங்கி அதைத் திருப்பித் தராமல் ஏமாற்றிக் கொண்டிருந்தான் ஒரு டம்பப் பேர்வழி. முல்லாவிடம் ஒரு பெருந் தொகையை கடனாக வாங்கி அவரை ஏமாற்ற அந்த டம்பன் தீர்மானித்தான். அந்த டம்பன் சாமர்த்தியமாக செயற்படத் திட்டமிட்டான். முல்லா தன்னை நம்பி பெருந்தொகை கொடுக்கமாட்டார் என்று அவனுக்குத் தெரியும், அதனால் தன் மீது அவருக்கு நம்பிக்கை ஏற்பட ஒரு நாடகம் நடிக்க எண்ணினான்.

ஒரு நாள் அவன் முல்லாவிடம் சென்றான். முல்லா அவர்களே எனக்கு ஒரே ஒரு காசு கடனாகத் தரமுடியுமா? என்று கேட்டான். நம்பிக்கை மோசம் செய்யாத யாருக்கும் நான் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் கடன் கொடுக்கத் தயங்க மாட்டேன். நீ ஒரு காசுதானே கேட்கிறாய். இதிலே நீ நம்பிக்கை மோசம் செய்யாமல் இருந்தால் பத்தாயிரம் காசுகள் கேட்டாலும் கொடுப்பேன் என்று கூறி டம்பனுக்கு ஒரு காசு கடனாகக் கொடுத்தார்.

டம்பன் நாலைந்து நாட்கள் கழித்து முல்லா கொடுத்த ஒரு காசை எடுத்துக் கொண்டு அவரிடம் வந்தான். முல்லா அவர் களே தாங்கள் கடனாகக் கொடுத்த அற்பப் பொருள் தான் என்றாலும் மிகுந்த நாணயத்துடன் பொறுப்புடன் திருப்பிக் கொடுத்துவிடுவது என்று வந்திருக்கிறேன். பண விடயத்திலே நான் மிகவும் நேர்மையானவன் என்பதை தாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறிவாறு டம்பன் ஒரு காசை முல்லாவிடம் திருப்பிக் கொடுத்தான். முகத்திலே மலர்ச்சியில்லாமல் ஏதோ உபாதைப் படுபவர்போல ஒரு காசை வாங்கிக் கொண்டார் முல்லா.

டம்பன் அந்த இடத்தை விட்டு அகலாமல் தலையைச் சொறிந்து கொண்டு நின்றான். என்ன விடயம்? என்று முல்லா கேட்டார். ஐயாயிரம் பொற்காசுகள் கடனாகத் தரவேண்டும். நாணயமாக ஒரு காசைத் திருப்பிக் கொடுத்தது போல ஐயாயிரம் பொற்காசுகளையும் திரும்பித் தந்து விடுவேன் என்றான் டம்பன். எனக்கு இனி நான் ஒரு காசு கூடக் கடனாகக் கொடுக்க முடியாது என்று முல்லா கோபமாகச் சொன்னார்.

முதலில் நான் வாங்கிய ஒரு காசைத்தான் திரும்பத் தந்துவிட்டேனே என்று ஒன்றும் விளங்காமல் கேட்டான் டம்பன். நீ ஒரு காசு கடன் வாங்கிய விடயத்தில் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டாய் என்றார் முல்லா. டம்பன் அதிர்ச்சியும், குழப்பமும் அடைந்தான். முல்லா அவர்களே நான் வாங்கிய தொகையை திருப்பித்தரும் போது நம்பிக்கைத் துரோகம் செய்ததாக எவ்வாறு கூறுகிறீர்கள்? என்று திருப்பிக் திகைப் போடு கேட்டான்.

நம்பிக்கை மோசந் தான் செய்துவிட்டாய் நான் கொடுத்த ஒரு காசை நீ திரும்பி கொடுக்காமல் ஏமாற்றிவிடுவாய் என்று நம்பினேன். நீ திருப்பிக் கொடுத்துவிட்டாய். அதாவது நான் என்ன நம்பினேனோ அதற்கு மாறாக நடந்து விட்டாய் ஆகவே இதுவும் நம்பிக்கை மோசந் தான். அதனால் ஒரு காசு கூட உனக்கு கடன் தரமாட்டேன் என்று கூறியவாறே முல்லா வீட்டுக்குள் எழுந்து சென்றுவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகை சிறப்பானதாக மாற்றுவதில் நாம் ஒவ்வொருவரும் முக்கிய அங்கம் வகிக்கின்றோம்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புலம்பெயர் உறவுகளுக்கு ஓர் அவசர மடல்

புலம்பெயர் நாடுகளில் உள்ள எம் தமிழ் உறவுகளுக்கு அன்பு வணக்கம்.

நீங்கள் யாபேரும் நலமும் வளமும் பெற்று வாழப் பிரார்த்திக்கின்றோம்.

தவிர, உங்களின் தமிழ்ப் பற்றும் தாயகத்தின் மீது நீங்கள் கொண்டுள்ள தீராத காதலும் நம் தமிழினத்துக்குப் பெருமை தருவதாகும்.

இதற்கும் மேலாக, நம் ஈழத் தமிழினம் உரிமையோடு சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காகப் பனிபொழியும் தேசத்திலிருந்து கொண்டு நீங்கள் நடத்துகின்ற போராட்டங்கள் – ஆர்ப்பாட்டங்கள் – ஊர்வலங்கள் கண்டு புளகாங்கிதம் அடையாமல் இருக்க முடியாது.

மேலும் உங்களின் அமைப்பு ரீதியிலான இயங்குநிலை கண்டு வியந்தோம். கனடா, பிரிட்டன், அமெரிக்கா உட்பட வெளிநாடுகளின் அரசியலில் நீங்கள் கொண்டுள்ள வகிபாகம் எம் தமிழினத்துக்குப் பெருமையும் சிறப்பும் தருவதாகும்.

அதிலும் குறிப்பாக கனடா எம் தமிழினத்தின் மீது கொண்டுள்ள அதீத கருசனையில் உங்களின் ஈடுபாடும் இராஜதந்திர நகர்வும் போற்றுதற்குரியவை.

ஒட்டுமொத்தத்தில் நீண்ட நெடிய போரில் நொந்து போயுள்ள நம் தாயகம் இன்னமும் நம்பிக்கையோடும் வீரியத்தோடும் இருப்பதற்கு புலம்பெயர் தமிழ் உறவுகளாகிய நீங்களே மூலகாரணம் என்பதில் மாற்றுக்கருத்திருக்க முடியாது.

இருந்தும் புலம்பெயர் நாடுகளில் இருக்கக் கூடிய தமிழ் அமைப்புகளிடையே ஒற்றுமையின்மையும் அவற்றின் தனித்தனியான செயற்பாடுகளும் எங்கள் தமிழினத்துக்குப் பலயீனமாக இருப்பதையும் நீங்கள் நிச்சயம் ஏற்றுக் கொள்வீர்கள்.

தவிர, புலம்பெயர் நாடுகளில் இருக்கக் கூடிய தமிழ் அமைப்புகளினதும் தனிநபர்களதும் நிதிப் பங்களிப்பு எங்கள் தமிழர் தாயகத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் பொதுத் தேர்தலில் களமிறங்கக் காரணமாயிற்று.

இதனை இன்னுமொரு வடிவில் கூறுவதாயின், கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தரப்புகளின் உடைவுக்கும் பிரிவுக்கும் அவை சிதறுண்டு சின்னாபின்னப்படுவதற்கும் எம் புலம்பெயர் தமிழ் அமைப்புகளினதும் தமிழ் உறவுகளினதும் நிதிப் பங்களிப்பும் காரணம் எனலாம்.

இதையும் கடந்து, ஏன்? எதற்கு? என்று விசாரிக்காமல் நீங்கள் அரசியல் சார்ந்து அனுப்புகின்ற பணத்தால், எங்கள் அரசியல் களம் விசித்திரமாகிப் போயுள்ளது.

எனவே நிதி உதவியால் மட்டும் நாம் எதையும் செப்பனிட்டுவிட முடியாது என்பதைத் தயவு செய்து உணர்ந்து கொள்ளுங்கள்.

உங்களின் நிதிப் பங்களிப்பு எங்கள் தாயகத்துக்கு மிகவும் அவசியமானது. அதே நேரம் நீங்கள் இரவு பகலாகப் பனியிலும் வெயிலிலும் பாடுபட்டு உழைத்த பணம்; உதவி என்ற பெயரால் வீணாகிப்போகுமாயின், அதைவிட்ட அநியாயம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

எனவே எதையும் ஆராய்ந்து செய்யுங்கள். உங்களின் அதீதமான நிதி உதவி ஊழலுக்கும் மோசடிக்கும் வித்திடுமாக இருந்தால், அங்கு உங்களின் தவறே முதலிடத்தில் இருக்கும்.

அதேநேரம் அரசியல் சார்ந்து நீங்கள் அனுப்புகின்ற நிதிப் பங்களிப்பை ஆதாரத்தோடு வெளிப்படுத்துங்கள். இல்லையேல் நம் தமிழர் தாயகத்தில் அரசியல் அதிக இலாபம் ஈட்டும் தொழில் என்பதாகிவிடும்.

## மலக்குழிக் கழிவு நீர் கிணற்றில் கலக்கும் அபாயம்

### பொ.ஐங்கரநேசன் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

கொட்டித் தீர்த்த பெங்கால் புயல்மழை கிணறுகளின் நீரின் தரத்தைக் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது. பெருக்கெடுத்த வெள்ள நீர் கிணறுகளை நிரப்பியுள்ளதோடு, பல இடங்களில் மலக்குழிக் கழிவு நீர் கிணற்று நீருடன் கலக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கொதித்தாறிய நீரைப் பருகுவதே பாதுகாப்பானது எனத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

பெங்கால் புயல் ஏற்படுத்திய வெள்ளப் பெருக்குத் தொடர்பாக பொ. ஐங்கரநேசன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெங்கால் புயல் 2008 நவம்பரில் தாக்கிய நிசா புயலைவிட வீரியம் குறைவானது. ஆயினும், நிசாவைவிட மிக மோசமான வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கின் வருடாந்தச் சராசரி மழைவீழ்ச்சியான 1240 மில்லிமீற்றர் மழையை ஒக்டோபர் மாதம் முடிவடைவதற்கு முன்பாகவே பெற்றிருந்த நிலையில் பெங்கால் புயல் 720 மில்லிமீற்றர் மழையை மேலதிகமாகக் கொண்டு வந்து கொட்டியுள்ளது.

ஏற்கனவே நிலம் அதன் நீர்க் கொள்ளளவை எட்டியிருந்த நிலையில் இம் மேலதிக மழைநீர் போக்கிடமின்றி வெள்ளக்காடாக உருவெடுத்ததில் நீர்நிலைகள் மாசடைந்துள்ளன.

வெள்ள நிவாரணப் பணிகளில் நான் ஈடுபட்டிருந்தபோது பல்வேறு பகுதிகளிலுமுள்ள கிணறுகளில், மலக்குழிக் கழிவுநீர் கலக்கும் அபாயம் என்னால் உணரப்பட்டுள்ளது.

கிணறுகளில் குளோரின் இட்டுத்தொற்று நீக்குவதும், கிணற்று நீரை இறைப்பதும் அவசியமானவை. எனினும் இவை மாத்திரமே பாதுகாப்புக்குப் போதுமானவையல்ல.

வெடிப்புகளையும் துளைகளையும்கொண்ட மயோசின் சுண்ணாம்புப் பாறைகளினூடாக கிணற்றுக்குள் கசியும் நிலத்தடி நீர் இன்னும் சில வாரங்களுக்கேனும் கிருமிகளைக் காவிவரும் அபாயம் உள்ளதால் கொதித்து ஆறிய நீரே முழுப்பாதுகாப்புக்கான உத்தரவாதம் ஆகும்.

வெள்ளச் சேதம் அதிகமானதற்கு வெள்ளநீர் உடனடியாவே கடலைச் சென்றடையக்கூடிய கட்டுமான வசதிகள் எம்மிடம் போதாமையும் ஒரு காரணமாகும். இருக்கின்ற வெள்ள வாய்க்கால்களும் எம்மால் முறையாகப் ப்ராமரிக்கப்படவில்லை.

பூமி சூடாகுவதன் விளைவாக ஏற்பட்டு வரும் காலநிலை மாற்றம் வருங்காலத்தில் இன்னும் மோசமான வீரியம் மிக்க புயல்களை உருவாக்குமென ஆய்வாளர்கள் எச்சரித்து வருகின்றனர்.

இப்போதே நாம் விழித்துக்கொண்டு முற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடின் இயற்கை ஏற்படுத்தப் போகும் பேரனர்த்தங்களில் இருந்து நாம் ஒரு போதும் தப்பமுடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந-7)

## பலஸ்தீன மக்களின் துயரம் சகிக்கமுடியாதது - அநுர

(கொழும்பு)

பலஸ்தீன மக்களின் துயரங்கள் சகித்துக் கொள்ள முடியாதவை என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன மக்களிற்கான ஐக்கிய நாடுகளின் ஆதரவு தினத்தை குறிக்கும் விதத்தில் ஜனாதிபதி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

பலஸ்தீனப் பகுதிகளிலும் மேற்கு ஆசியாவிலும் ஒரு வருடத்திற்கு மேலாக நீடித்துவரும் பொதுமக்களின் உயிரிழப்புகளும், தொடரும் அழிவுகளும் சகித்துக் கொள்ள முடியாதவை.

பலஸ்தீன மக்களிற்கான இலங்கையின் ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்துவதோடு சர்வதேச மன்றங்களில் காசாவின் மனிதாபிமான நிலை குறித்து இலங்கை ஆழ்ந்த கரிசனையை வெளியிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், பலஸ்தீனியர்களிற்கான ஐ.நாவின் நிவாரண முகவர் அமைப்பிற்கு எதிரான அச்சுறுத்தல் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள ஜனாதிபதி,

அகதிகளின் வாழ்வை தாங்கிப்பிடித்த மனிதாபிமான சேவை வீழ்ச்சியடையும் நிலையில் உள்ளமை ஏமாற்றமளிக்கின்றது என்றார். (ந-7)

## மோ.சைக்கிள் மோதி பெண் உயிரிழப்பு

(தலங்கம)

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடுவல - கொள்ளுப்பிட்டி பிரதான வீதியில் தலங்கம வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (30) மோட்டார் சைக்கிள் மோதி பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தலங்கம வடக்கைச் சேர்ந்த 74 வயதுடையவர் எனத் தெரிய வருகிறது.

கடுவல பகுதியிலிருந்து பத்தரமுல்லை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியைக் கடந்து சென்ற பெண் மீது மோதியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த பெண் தலங்கம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன்,

மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் விபத்தில் காயமடைந்து களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## சட்டவிரோத சிகரெட்டுகளுடன் ஒருவர் பொலிஸாரால் கைது

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளுடன் முச்சக்கரவண்டியில் பயணித்த ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை (30) பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் முகாம் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் அவர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வெல்லவ பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடையவர் என தெரிய வருகிறது.

சந்தேக நபரிடமிருந்து 1400 சட்டவிரோத சிகரெட்டுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து முச்சக்கரவண்டியுடன் சந்தேக நபர் வெல்லவ பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை முறைமை;

## முடிவுக்கு கொண்டு வரத்தீர்மானம்

**(கொழும்பு)**

**இலங்கையில் நடைமுறையில் உள்ள அரசியலமைப்பின் 13 ஆவது திருத்த சட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள மாகாண சபை முறைமையை முடிவுக்கு கொண்டு வரவும் புதிய அரசியலமைப்பின் ஊடாக அனைத்து இன மக்களுக்கும் சமமான உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்யவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிட்டார்.**



சுமார் 37 வருடகாலமாக நடைமுறையில் உள்ள மாகாண சபை முறைமையால் நாட்டிற்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ எவ்விதமான பலனும் இதுவரையில் கிடைக்கவில்லை. மாறாக இலங்கையில் அநாவசியமான பிரச்சினைகளை தோற்றுவிக்கும் வகையிலான நிலைமையே காணப்படுகிறது. எனவே சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் பிரச்சினைகளை தோற்றுவிக்காத வகையிலான அரசியல் ரீதியிலான தீர்வுத்திட்டத்தை எமது அரசாங்கம் முன்வைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெளிவுப்படுத்துகையில்,

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படுத்துவதாக கூறிய இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தை ஆரம்பகாலத்தில் இருந்தே நாங்கள் எதிர்த்து வந்துள்ளோம். நாட்டு மக்களின் விருப்பத்துக்கு மாறாகவும் அமைச்சரவையில் கூட அனுமதி பெறாமலுமே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இருப்பினும் அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசியலமைப்பின் ஊடாக நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான மாகாண சபை முறைமையால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படவில்லை. மாறாக இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையிலான சூழலே காணப்படுகிறது.

எனவே பயனற்ற மாகாண சபை முறைமைக்கு பதிலாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் நிறைவேறக்கூடியதும் அனைத்து இன மக்களுக்கும் சமமாக உரிமையை பெற்றுக்கொள்ளும் வகையிலுமான புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயற்படுகின்றது.

இதற்காக இலங்கையில் உள்ள அனைத்து தரப்பினர்களினதும் கருத்துக்களைக் கேட்டறிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்து குறுகிய காலங்களே ஆகின்ற நிலையில், நாட்டின் பொருளாதார பிரச்சினைகளைத் தீர்ப்பதில் முன்னுரிமை அளித்து செயற்பட்டாலும், நிரந்தர தீர்வுகளுக்கான பல நடவடிக்கைளை முன்னெடுத்து வருகின்றோம்.

நடைமுறையில் உள்ள பழைமைவாய்ந்த அரசியலமைப்பிற்கு பதிலாக புதிய அரசியலமைப்பு உருவாக்குவது முக்கிய பொறுப்பாக நாங்கள் கருதுகின்றோம்.

புதிய அரசியலமைப்பின் ஊடாக தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு கிடைக்கும். அப்போது 13ஆவது அரசியலமைப்பு திருத்தமோ அல்லது மாகாண சபை முறைமைக்கான தேவையோ நாட்டில் இருக்காது என அவர் தெரிவித்தார். (நி-8)

## வெங்காயத்திற்கான விசேட வரி குறைப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்துக்கான விசேட பொருட்கள் வரியை குறைக்க நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி பெரிய வெங்காயத்துக்கான விசேட வரியை 30 ரூபாயில் இருந்து 10 ரூபாவாக குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்குக்கு விதிக்கப்பட்டுள்ள விசேட பொருட்கள் வரியை மாற்றியமைக்காமல் தொடர்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ உருளைக் கிழங்கின் விசேட பொருட்கள் வரி 60 ரூபாயாக காணப்படுகிறது.

இந்த வரித் திருத்தங்கள் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, உள்ளூர் விவசாயிகளைப் பாதுகாக்கவும் நுகர்வோருக்கு நியாயமான விலையை உறுதி செய்யவும் குறுகிய கால நடவடிக்கையாக இதனை அமுல்படுத்த நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (நி-8)

# சோதனையிடப்படவுள்ள வணிக நிலையங்கள்

## பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட வேலைத்திட்டம்

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் சந்தையில் நுகர்வோருக்கு ஏற்படக்கூடிய அநீதிகளைத் தடுப்பதற்காக நுகர்வோர் விவகார அதிகார சபை விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது.

அதன்படி நேற்று முதல் ஜனவரி 15ஆம் திகதி வரை சில்லறை வர்த்தக நிலையங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகளில் சோதனை நடத்தப்படவுள்ளது.

பண்டிகைக் காலங்களில் நுகர் வோரால் அதிகளவில் கொள்வனவு செய்யப்படும் ஆடைகள், நீடித்து நிலைத்திருக்கும் பொருட்கள் மின் உபகரணங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட உள்ளதாக அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, காலாவதியான மற்றும் மாற்றப்பட்ட தகவல்களுடன் பல பொருட்கள் சந்தைக்கு வருவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதால் கடந்த சில நாட்களாக சோதனையிடப்பட்ட மொத்த விற்பனை நிலையங்கள் மற்றும் களஞ்சியசாலைகள் தொடர்பில் விசேட அவதானத்துடன் தொடர்ந்தும் சுற்றிவளைக்கப்படுவதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான முறைப்பாடுகள் இருப்பின் 1977 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தகவல் தெரிவிக்கலாம் என அந்த அதிகார சபை பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது. (நி-8)

# வவுனியா குளத்தில் குவியும் மீன்கள்

## பிடித்துச் செல்லும் மக்கள்



(குருமன்காடு)

வவுனியா குளத்தில் வான் பாயும் இடத்தில் நீருடன் பெருமளவான மீன்களும் வருவதனால் அதனை போட்டி போட்டு மக்கள் பிடித்துச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

வவுனியாவில் பெய்த கடும் மழை காரணமாக பல குளங்கள் வான் பாய்ந்து வருகின்றது.

இதேவேளை வவுனியா நகரையண்டி உள்ள பிரதான குளமான வவுனியா குளமும் வான் பாய்ந்து வருகின்றது.

குறித்த வான் பாயும் நீருடன் குளத்து மீனும் பெருமளவில் வருவதால் நுளம்பு வலை, மீன் வலை, துணி, வேட்டி என்பவற்றை கொண்டு மீன்களைப் பிடிப்பதை அவதானிக்க முடிகிறது.

இதன்போது சிலாப்பியா, யப்பான், விரால், கௌிறு போன்ற பெருமளவான மீன்கள் பிடிக்கப்படுவதுடன் அதனை பிடித்துச் செல்பவர்கள் மகிழ்ச்சியுடன் செல்வதையும் அவதானிக்க முடிகிறது. (நி-8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவர்...

தின் ஏற்பாட்டில், புலிகளின் தலைவரின் பூர்வீக வீடு அமைந்திருந்த இடத்தில் கேக் வெட்டி, மரநடுகை மேற்கொள்ளப்பட்டு, பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

அதன்போது நிகழ்விடத்தில், புலிகளின் தலைவரின் புகைப்படத்துடனான பதாகை ஒன்றும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

அவ்வேளை அங்கு வந்த வல்வெட்டித்துறைப் பொலிஸார், புலிகளின் தலைவரின் படத்தை அகற்றிவிட்டு நிகழ்வை நடத்த அறிவுறுத்தினர்.

அதனையடுத்து, ஏற்பாட்டாளர்கள் புலிகளின் தலைவரின் படத்தை மறைத்து விட்டு நிகழ்வை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் பிறந்தநாள் நிகழ்வு தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நிகழ்வின் ஏற்பாட்டாளர் சிவாஜிலிங்கத்தை வாக்குமூலம் வழங்க பொலிஸ் நிலையம் அழைத்தபோது, சுகவீனம் காரணமாக வருகை தர முடியாது என பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து, பொலிஸார் சிவாஜிலிங்கத்தின் வீட்டிற்குச் சென்று வாக்குமூலங்களைப் பெற்றுள்ளனர்.

அதேவேளை, பிறந்தநாள் நிகழ்வில் கலந்துகொண்ட ஆறு பேரிடம் பொலிஸார் இதுவரையில் வாக்குமூலங்களைப் பெற்றுள்ளதாகவும்; பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-7)

## பிரித்தானியா...

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு வடக்குக் குற்றத்தடுப்பு பிரிவால் கொழும்பு நீதவான் நீதிமன்றில் பெற்ற பயணத்தடை உத்தரவிற்கு அமைய சந்தேகநபர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தபோது, குடிவரவு மற்றும் குடியகல்வு பிரிவினரால் விமான நிலையப் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து விமான நிலைய பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலையப் பொலிஸார் மற்றும் கொழும்பு வடக்குக் குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## கைதான...

யில் உள்ள புகைப்படங்களைத் தனது முகநூலில் பகிர்ந்த குற்றச்சாட்டில் இணுவில் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய குடும்பஸ்தரைப் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட அவரை யாழில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் சுமார் 48 மணி நேரம் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்ததுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். பதில் நீதவான் முன்னிலையில் முற்படுத்தினர்.

இதனையடுத்து பதில் நீதவான் சந்தேகநபரை எதிர்வரும் 04ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக ஒழிப்பேன் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்திருந்த நிலையில் மாவீரர் நாட்கள் தொடர்பில் முகநூலில் பதிவிட்டவர்களிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)

## ஜனாதிபதி...

மேலும் தெரிவித்துள்ளதாவது,

“நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தி உறுதியளித்திருந்தது. எனினும், ஜனாதிபதி அநுர குமாரவின் கொள்கை விளக்க உரையில் அது பற்றி ஒரு வார்த்தையேனும் கூறப்படவில்லை.

அத்துடன், தேசிய இனப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது பற்றியும் அவர் விவரிக்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் முன்னோக்கிச் செல்லும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், தேர்தலுக்கு முன்னர் இந்த விடயத்தைக் குறிப்பிடவில்லை. சர்வதேச நாணய நிதியத்துடன் புதிய ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும் என்றே கூறினார். ஆனால், தற்போது ரணிலின் வழியிலேயே அநுர குமாரவும் செல்கின்றார். சர்வதேச நாணய நிதியத்தின் கைப் பாவையாக தேசிய மக்கள் சக்தியும் மாறியுள்ளது என்றே கூற வேண்டும்” என்றார். (ந-7)

## லாஃப்ஸ்...

அவதானம் செலுத்தியுள்ளதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதத்திலிருந்து லாஃப்ஸ் எரிவாயு சந்தைக்கு விநியோகிக்கவில்லை என எரிவாயு விற்பனைப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

இதனால் நுகர்வோர் மற்றும் வர்த்தகர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் எரிபொருள் நிரப்பும் இடமான மாபிம பிரதேசத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியதால் விநியோகம் மேலும் தடைப்பட்டதாக லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம் அறிவித்திருந்தது.

அதேநேரம் அம்பாந்தோட்டை முனையத்திற்கு எரிவாயு கொண்டு வரும் கப்பல் தாமதமானது. இதனால் கடந்த காலங்களில் எரிவாயு கொடுக்க முடியாத நிலை இருந்தது.

இப்போது குறித்த கப்பலில் இருந்து எரிவாயு இறக்கப்பட்டுள்ளது. எனவே விரைவில் நிலைமை சீர்செய்யப்படும் என அந்நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை பருத்தித்துறைப் பகுதிக்கு நேற்று மட்டுப்படுத்தப்பட்ட அளவில் லாஃப்ஸ் எரிவாயு விநியோகிக்கப்பட்டபோது எரிவாயு சிலிண்டர் தாங்கிய வாகனத்தைப் பொதுமக்கள் முற்றுகையிட்டதால் அப்பகுதியில் பரபரப்பு நிலை ஏற்பட்டது. (ந-7)

## பிறப்பு...

ன்றி நேற்று அதிகாலை [illegible]

[illegible]

இவ்வாறு உயிரிழந்தவர் பிறப்பு - இறப்புப் பதிவாளராகக் கடமையாற்றும் தாவடி கிழக்கைச் சேர்ந்த அன்னலிங்கம் செந்தில் குமரேசன் (வயது-64) என்பவராவார்.

மானிப்பாய் - தாவடி வீதியூடாக சுதுமலைக்கு அண்மையில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது குறித்த மோட்டார் சைக்கிளும் அவ்வீதியால் வந்த காரும் விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த பிரஸ்தாப நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

தலையில் பலத்த காயம் ஏற்பட்டமையினாலேயே மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை யாழ். மாவட்ட மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2024.12.01
சீட்டிழுப்பு இலக்கம் 5672
L 2 5 4 8 1 3
அத சம்பத L 4 8 1 3
சீட்டிழுப்பு இலக்கம் 247
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.12.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1702
O 22 23 42 43 O
Double Chance 49708

மெகா பவர்
திகதி 01/12/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2020
E 10 45 56 58 62
Double Chance 174805

லக்கி 7 VIP
திகதி 2024.12.01
சீட்டிழுப்பு இலக்கம் 0498
R 1 7 9 0 4 7 R

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3914
சீட்டிழுப்பு திகதி 01.12.2024
M 17 30 62 64
M 193003

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.01
சீட்டிழுப்பு இலக்கம் 0981
சிம்மம் 11 43 44 55 சிம்மம்
081488 36

உத்தியோகபூர்வ முடிவுகள்
01.12.2024 வெற்றி வாரம் 380
ஆங்கில எழுத்து D
4 2 9 1 4 8
48044
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,460,131.20
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2646
சீட்டிழுப்பு திகதி 2024.12.01
தினம் ஞாயிற்றுக்கிழமை
30 60 70 71 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,401,430.40

சனிதா
திகதி 01.12.2024 வெற்றி வாரம் 4806
19 43 47 71 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,920,292.40
56752
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 569
01.12.2024 ஞாயிற்றுக்கிழமை
36 44 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4358
சீட்டிழுப்பு திகதி 01.12.2024
தினம் ஞாயிற்றுக்கிழமை
03 24 26 29 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,659,220.40
141784

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 14 17 20 29 72
சுப்பர் இலக்கம்
1822
01.11.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.556,888,981.80

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 2472
சீட்டிழுப்பு திகதி 2024.12.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,702,480.00
32 38 40 61 U
290441


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானின் அபிவிருத்தித் திட்டங்களை மீளவும் ஆரம்பிக்கப் பூரண ஆதரவு

## ஜப்பானியத் தூதுவரிடம் சஜித் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜப்பான் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் கடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக இடை நிறுத்தட்டிருந்த நிலையில், அவற்றை மீள ஆரம்பிக்குமாறும் அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நாம் பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் இசோமடாவிடம் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் ஜப்பான் தூதுவர் அகியோ இசோமடாவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று கொழும்பில் இடம்பெற்றது.

இதன்போதே சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் நீண்ட காலமாக இருந்து வரும் இராஜதந்திர உறவைத் தொடர்ந்தும் பேணுமாறும், இதற்கு தன்னால் முடிந்த பங்களிப்பைத் தருவதாகவும் இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜப்பான் தூதுவரிடம் உறுதியளித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் காவிந்த ஜயவர்தனவும் இச்சந்திப்பில் கலந்து கொண்டார். (ந-7)

# வாகன இறக்குமதி பெப்ரவரியில் சாத்தியம்

## இறக்குமதியாளர் சங்கம் நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல், வாகன இறக்குமதி ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்ப்பதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய இலங்கை வாகன இறக்கு மதியாளர்கள் சங்கத்தின் தவிசாளர் இந்திக்க சம்பத் மெரிஞ்சிகே,

எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி உரிய முறையில் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

பெப்ரவரியில் இருந்து கண்டிப்பாக வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும், ஏனெனில் இந்த அரசாங்கம் எமக்கு ஒரு விஞ்ஞாபனமாக வாகன இறக்குமதியை அனுமதிப்பதாக உறுதி வழங்கியுள்ளது.

வாகனங்களை இறக்குமதி செய்ய நாங்கள் தயாராக உள்ளோம், இதன் மூலம் மக்கள் நியாயமான விலையில் நல்ல வாகனத்தைப் பெற முடியும்.

வாகன இறக்குமதிக்கான விஞ்ஞாபனத்தை தயாரிப்பதற்காக நிதி அமைச்சு குழுவொன்றை நியமித்துள்ளது.

இலங்கையில் சுமார் 600 வாகன இறக்குமதியாளர்கள் 4 வருடங்களாக அநாதர வாக உள்ளனர், இங்குள்ள வியாபாரிகளுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்றார். (ம-7)

## வவுனியா...

வந்த குடும்பஸ்தர் மீது குழுவொன்றுவாளால்வெட்டியுள்ளது.

இதனால் படுகாயமடைந்த அவர் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் நாவற்குளம் பகுதியைச் சேர்ந்த செல்வநிரோஜன் வயது 46 என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பாக ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-7,250)


## மணப்பெண் தேவை

01. சுண்டிக்குழி, இந்து, 1987, திருவோணம், BA (Hons) Business Managment, CIMA, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 43 625
02. குப்பிளான் - கொக்குவில், இந்து, 1990, கேட்டை, Phd, Director, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 46 762
03. நெல்லியடி, இந்து, 1991, பூராடம், HND (Jaffna University), USA Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 47 452
04. காரைநகர் - கோப்பாய், இந்து, 1992, பூரம், BSc Engineering, Canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 37 285
05. நீர்வேலி, இந்து, 1989, சுவாதி, Phd, South Korea Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 36 432
06. யாழ்ப்பாணம், இந்து, 1986, மகம், MSc, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 35 814
07. புலோலி, இந்து, 1982, சுவாதி, BSc Engineering, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 35 391
08. கரவெட்டி - புங்குடுதீவு, இந்து, 1989, மிருகசீரிடம், BSc, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 38 558
09. காரைநகர், இந்து, 1986, சித்திரை, BSc, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 27 042
10. காரைநகர், இந்து, 1986, உத்திராடம், Airspace Engineering, USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(2640)

எம்மிடம் எல்லா ஜாதியிலும் உள்நாட்டு, வெளிநாட்டு மாப்பிள்ளைகளும் பெண்களும் உண்டு.
Unmarried, Divorce என்பனவும் உண்டு.

www.thaalee.com திருமண சேவை - 077 539 3728 - 077 803 8193


## தமிழ்...

இலங்கையில் போரின்போதும், அசாதாரண சூழல்களின்போதும் உயிரிழந்தவர்களை நினைவுகூர முடியும். அதற்கு நாங்கள் தடைகளை ஏற்படுத்தப்போவதில்லை என்பதை முற்கூட்டியே அறிவித்திருந்தோம்.

அந்த வகையில் வடக்கு, கிழக்கு மக்கள் அமைதியான முறையில் தமது அன்புக்குரியவர்களை நினைவேந்தினார்கள். ஆனால், தென்னிலங்கையில் அந்த விடயங்களை அரசியல் சுய இலாபத்துக்காகச் சிலர் பயன்படுத்த முனைகின்றனர் என்பதை அதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

உண்மையில் அவர்கள் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள். தமது அரசியல் மீள்பிரவேசத்துக்காக வழக்கம்போலவே இனவாதத்தினை திணிக்கப் பார்க்கின்றார்கள், ஆனால் அவர்களின் நோக்கங்களை மக்கள் அறிவார்கள்.

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசாங்கத்துக்கு வடக்கு, கிழக்கு மக்கள் வாக்களித்துள்ளார்கள். அவர்கள் மாற்றத்தினை எதிர்பார்கின்றார்கள். அதற்கான செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கும்.

வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் இனவாதம், மதவாதம் தோல்வி கண்டுவிட்டது. மீண்டும் அதற்கு இடமளிப்பதன் ஊடாக நாட்டுக்கு எதிர்மறையான நிலைமைகளே ஏற்படும். ஆகவே மக்கள் அத்தகையவர்களுக்கு இடமளிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

தற்போது தேசிய பாதுகாப்பு உயர்ந்த நிலையில் உள்ளது. அதற்குக் குந்தகம் விளைவிக்கும் எந்த விதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் படவில்லை.

அதேபோன்று வடக்கிலும் கிழக்கிலும் பயங்கரவாதத்தினை ஆதரித்து அதனை முன்னிலைப்படுத்துபவர்கள் சம்பந்தமாகவும் நாம் தீவிரமாகக் கவனம் செலுத்தியிருந்தோம். அது தொடர்பில் தற்போது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார். (ந-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1701)

076 825 7716 (ஆகாஸ்)



## பொது அறிவித்தல்
### மாநகர சபை யாழ்ப்பாணம்
### நிகழ்ச்சித்திட்ட வரவு செலவுத்திட்டம் (வரைவு) -2025

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்ட வரவு செலவுத்திட்டம் (வரைவு) 2024.12.02 ஆம் திகதி தொடக்கம் 2024.12.15 ஆம் திகதி வரை பொது மக்கள் பார்வைக்காக கீழ்க்குறிப்பிடப்பட்ட இடங்களிலும், யாழ்ப்பாணம் மாநகர சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் (Jaffna.mc.gov.lk) பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

- யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம்
- யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்
- நல்லூர் பிரதேச செயலகம்
- யாழ்ப்பாணம் மாநகர சபை - பொது சனத்தொடர்பு பகுதி
- யாழ்ப்பாணம் பொதுசன நூலகம்
- நவீன சந்தை - வாடிக்கையாளர் சேவை நிலையம்

இவ் வரைவினை பரிசீலித்து மேலும் முன்னேற்றகரமானதாக ஆக்குவதற்கு தேவையான தங்கள் கருத்துக்கள், முன்மொழிவுகள் இருப்பின் எதிர்வரும் 2024.12.15 இற்கு முன்னர் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(C-1699)

ச.கிருஷ்னேந்திரன்,
01.12.2024 மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.



புதிய கல்வியாண்டு - 2025
தரம் 6
கணிதம்
ஆசிரியர்
திரு.T.அற்புதராஜா
புதிய பிரிவு ஆரம்பம் : வியாழக்கிழமை (05.12.2024) காலை 8.00 மணி
202, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P - 077 722 2478
(2644)



V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு



உலர் உணவுப் பொருட்கள்
அனர்த்த கால நிவாரணத்திற்காக உலர் உணவுப் பொதிகளை வழங்க விரும்புவோர் எம்மிடம் சிறந்த விலையில் மொத்தமாகக் கொள்வனவு செய்யலாம்.
Happy Supermarket
உரும்பிராய்
077 350 4700
(2649)



வேலைக்கு ஆள் தேவை
சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் கதைக்கப்படும்.
தொடர்புகளுக்கு :
074 179 3394
(C-1700)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.